[illegible]

மலர் 1. இதழ் 3. ஜூன் 1933

JL
T15m211,N33
N33.1.3
190343

ஸ்டர் டெ. எம். 2912

990

# ஆரம்பக்கல்வி

## ELEMENTARY EDUCATION

REGISTRAR OF BOOKS
21 NOV 1933
MADRAS



By Courtesy of "Health" (Nilgris)

T2
T15m 211, N33
N33 · 1 · 3
190343

# "ஆரம்பக் கல்வி",

## சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| வருடம் 1-க்கு தபாற் கூலி உள்பட இந்தியா, பர்மா, சிலோன், | ரூ. | 1 0 0 |
| வெளி நாடுகளுக்கு | ,, | 2 0 0 |

ஆரம்ப பாடசாலைவைத்து பரிபாலித்துவரும் ஆசிரிய மானேஜர்களிடமும், மானேஜர்களிடமும் 1-8-0 ரூபாய் விதம் சந்தா வசூலிக்கப்படும். ஒரு ரூபாய் பத்திரிகைக்குப்போக மிகுதியுள்ள 8-அணாவில் 4-அணாவை அந்தந்த ஜில்லாவிலுள்ள ரேஞ்சுச்சங்கங்களுக்கும், மற்றொரு 4-அணாவை சென்னையிலுள்ள ஆசிரிய மானேஜர்கள் மாகாண சங்கத்திற்கும் சேர்த்துவிடப்படும். இப்பத்திரிகைக்கு 1-8-0 ரூ. கொடுத்து சேர்ந்துவிடும் ஆசிரிய மானேஜர்களும், மானேஜர்களும், ஒருவருடம் வரையில் தங்கள் ரேஞ்சு சங்கத்தின் அங்கத்தினர்களாகவும், மாகாண சங்கத்தின் அங்கத்தினர்களாகவும், கருதப்படுவர். இவ்வித ஏற்பாடு ஆசிரிய மானேஜர்கள் சங்கங்கள் சரிவர நடக்கும் ரேஞ்சுகளில் தகுதியாக இருக்கும். அவ்வித சங்கங்கள் இல்லாத இடங்களில் ஆசிரிய மானேஜர்கள் மாகாண சங்கத்திற்கு 4 அணாவை மாத்திரம் சேர்த்து 1—4—0 அனுப்பிவிட்டால் மாகாண சங்கத்தில் அவ்வப்போது நடக்கும் நடவடிக்கைகளை தனிப்படையாக அனுப்பிவைக்கப்படும்.

## விளம்பர விகிதம்.

| | | | |
|---|---|---|---|
| முழுபக்கம் ஒருதடவைக்கு | ரூ. | 15 0 0 |
| அரை பக்கம் ,, | ,, | 8 0 0 |
| கால் பக்கம் ,, | ,, | 4 0 0 |

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதவும்.

"ஆரம்பக் கல்வி ஆபீஸ்",
94-95, புதுத் தெரு மண்ணடி, மதராஸ்

## பொருளடக்கம்.


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | கடவுள் வணக்கம் .... .... | 89 |
| 2. | கல்வி மந்திரியவர்களும் ஜில்லாக் கல்விச் சபைகளும் | 90 |
| 3. | ஆசிரியர் குறிப்பு .... .... | 91 |
| 4. | கோபால கிருஷ்ண கோகலேயின் ஜீவிய சரித்திரம் .... | 92 |
| 5. | இந்திய வர்த்தமானம் .... ... | 94 |
| 6. | ஸ்ரீமான் ராவ் சாஹிப் எஸ். பி. இராஜமாணிக்கம் பண்டாரம் அவர்கள் சொற் பொழிவு | 96 |
| 7. | பெற்றோர் சங்கம் .... | 97 |
| 8. | பாடக் குறிப்பு .... .... | 100 |
| 9. | குழந்தைகள் பக்கம் .... .... | 103 |
| 10. | நீலகிரி .... .... | 104 |
| 11. | நடனம் ஓர் வித்தை .... .... | 105 |
| 12. | பெண்ணை வளர்க்கும் விதம் .... .... | 108 |
| 13. | ஆசிரியர் பகுதி .... .. | 110 |
| 14. | உதய குமாரன் ஓர் இனிய தமிழ் நாடகம் .... | 113 |
| 15 | சென்னை ஆரம்பக் கல்வி ஆக்ட் .... | 117 |
| 16. | விகட துணுக்குகள் .... .... | 121 |
| 17. | செய்தித் திரட்டு .... | 122 |
| 18. | தென்காசி ஆரம்பாசிரியர்கள் வருடாந்திர விழா .... | 124 |

21 NOV 1933

உ

ஓம்: பரப்பிரஹ்மணே நம:

# ஆரம்பக் கல்வி

சென்னை மாகாணத்திலுள்ள, ஆரம்பாசிரியர்கள், ஆசிரிய மானேஜர்கள்,
மானேஜர்கள், அபிவிருத்திக்கும், முன்னேற்றத்திற்கும்
உழைக்கும் ஓர் உயர்தர செந்தமிழ் மாதாந்திர பத்திரிகை.

பத்திராதிபர்:— பி. வீரராகவன்

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

மலர், 1. } ஸ்ரீமுக௵ ஆடி௴ 1933௵ ஜுலை { இதழ், 3.

## கடவுள் வணக்கம்.

அங்கிங் கெனாதபடி யெங்கும் ப்ரகாசமாய்
ஆனந்த பூர்த்தி யாகி
அருளொடு நிறைந்ததெது தன்னருள் வெளிக்குளே
அகிலாண்ட கோடி யெல்லாந்
தங்கும் படிக்கிச்சை வைத்துயிர்க் குயிராய்த்
தழைத்ததெது மனவாக்கி னில்
தட்டாமல் நின்றதெது சமயகோ டிகளெலாந்
தந்தெய்வம் எந்தெய்வ மென்
றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவும் நின்றதெது
எங்கணும் பெருவ ழக்காய்
யாதினும் வல்லவொரு சித்தாகி யின்பமாய்
என்றைக்கு முள்ள தெதுமேல்
கங்குல்பக லறநின்ற எல்லையுள தெதுஅது
கருத்திற் கிசைந்த ததுவே
கண்டன வெலாமோன வுருவெளிய தாகவுங்
கருதியஞ் சலிசெய்கு வாம். (தாயுமானவ

# கல்வி கனம் மந்திரியவர்களும் ஜில்லாக் கல்விச் சபைகளும்.

கடந்த ஜூன்மீ 22-ம் தேதி கனம் கல்வி மந்திரியவர்கள் எல்லூரில் விஜயம் செய்திருந்தபோது, ஜில்லாக் கல்விச்சபை அங்கத்தினரும், ஆசிரிய மானேஜர்கள் சங்கமும், வரவேற்புப் பத்திரமொன்றை வாசித்துக் கொடுத்தனர். அவைகளுக்கு பதிலளிக்கும்பொழுது அவர் கூறியதாவது கல்விச் சபைகள் ஆரம்பக் கல்வியை நமது நாட்டில் பரப்பவேண்டு மென்ற நோக்கத்துடன் 1920ஞூ த்தில் ஏற்பட்ட அரசியல் சீர்திருத்தத்தின்போது உண்டாக்கப்பட்ட சபைகளாகும். தற்போது இச்சபைகள் தபாலாபீசைப் போன்று வெறும் கிராண்டுத் தொகையை வாங்கிக்கொடுக்கின்றதேயொழிய, வரிகளை வசூலித்து எங்கெந்த விடங்களில் கல்வியைப் பரப்பவேண்டுமோ அந்தந்த விடங்களில் சுயேச்சையாக கல்வியைப் பரப்ப இயலாமலிருக்கின்றது. அது சபைகளின் குற்றமன்று. அவ்வித பொருப்பை ஏற்படுத்தி இன்னும் இக்கல்விச் சபைகளை நன்றாக வேலைசெய்யும்படியான முறையில் ஆரம்பக் கல்விச் சட்டத்தை சீர்திருத்தப் போவதாகவும், இவ்வருடம் எய்டட் பாடசாலைகளுக்கு கொடுக்கப்படும் கிராண்டுத் தொகையை இனிவரும் வருடங்களில் குறைவுபடாமல் கொடுக்க ஏற்பாடு செய்வதாயும் வாக்களித்தார்.

இம்மாதிரியாக மந்திரியவர்கள் சாதுர்யமாக பேசினதைப்பற்றி நமக்கு மிகவும் சந்தோஷந்தான். ஆனால் இவ்வார்த்தைகள் சென்னை போர்ட் செயின்ட் ஜார்ஜ் கோட்டைவரைக்கும் வருமா அல்லது எல்லூர் மட்டிலும் நின்றுவிடுமா என்பதுதான் சந்தேகம். இவர் சொல்லிய வார்த்தைகளில் அநேக உண்மைகள் உண்டு. ஸர். ஏ. பி. பாத்ரோ அவர்கள் கல்வியிலாகா மந்திரியாக இருந்த காலையில் ஜில்லாக் கல்விச்சபை கிராண்டு கொடுக்கும் தபாலாபீசுகளாகச் செய்யக்கூடாது, கல்வி வரியை விதிக்கும் அதிகாரத்தையும் கொடுத்து தற்போது தாலூக்கா போர்ட்டுகளிலுள்ள எடுகேஷன் பண்டை ஜில்லா கல்விச்சபை ஆதிக்கத்தில் வைத்து, எல்லா பாடசாலைகளையும் ஜில்லாக் கல்விச் சபைகளின் ஆதிக்கத்திலேயே நடைபெறவேண்டு மென்பது அவரது கொள்கை. இக் கொள்கையை மேற்கொண்டு ஒரு மசோதாவை அவர் காலத்தில் கொண்டுவந்தார். அது அப்போது யேதோ அனுவசியமான காரணங்களால், அந்த அருமையான மசோதா பரிசீலனைக்கு தள்ளிவைக்கப்பட்டு அவர் மந்திரி பதவியை விட்டதும் இருக்குமிடம் தெரியாமலேயே போய்விட்டது. அந்த மசோதா அமுலுக்கு கொண்டுவரப்பட்டிருக்குமாயின் ஆரம்ப பாடசாலைகள் ஒன்றுக்கொன்று போட்டா போட்டியில்லாமல், ஆரம்பக் கல்வி நமது இராஜதானியில் தீவிரமாக இந்த 10-வருடங்களில் எவ்வளவோ பரவி யிருக்குமென்பதில் ஐயமில்லை. இனியாவது தற்போதுள்ள மந்திரியாரவர்கள் போன வருடம் மூன்றும் பேருக்குத் தெரியாமல் சட்டத்தைத் திருத்தி, தற்போது சென்னையிலுள்ள எய்டட் பாடசாலைகள் நஷ்ட ஈடு தொகையில்லாமல் திண்டாடிக் கொண்டிருப்பதைப்போல் செய்து விடாமல், நன்றாக யோசித்து ஆரம்பக் கல்வியில் ஈடுபட்ட சபைகள், சங்கங்களின் அபிப்பிராயங்களையனுசரித்து தற்போதுள்ள உப்புகரிக்கும் ஆரம்பக் கல்விச் சட்டத்தை என்றைக்கும் இனிப்பான செங்கரும்பாக செய்வாரென நம்புகின்றோம்.

# ஏழைப் பெண் பிள்ளைகளுக்கு சம்பள நஷ்ட்ட ஈடு

தற்போது எய்டெட் பாடசாலைகளில் வாசிக்கும் சம்பளம் கொடுக்க சக்தியில்லாத, ஏழை பெண் பிள்ளைகளுக்கு அரசாங்கத்தார் கீழ்கண்ட ஸ்டாண்டர்ட் ரேட் பிரகாரம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1-ம் | வகுப்பு | 0 | 0 | 6 |
| 2-ம் | ,, | 0 | 1 | 0 |
| 3-ம் | ,, | 0 | 1 | 0 |
| 4-ம் | ,, | 0 | 1 | 0 |
| 5-ம் | ,, | 0 | 1 | 0 |
| 6-ம் | ,, | 0 | 2 | 0 |
| 7-ம் | ,, | 0 | 2 | 0 |
| 8-ம் | ,, | 0 | 2 | 0 |

நஷ்ட ஈடு கொடுக்க ஏற்பாடு செய்திருப்பதைப்பற்றி எல்லோரும் பாராட்டத்தக்கது. இவ்வித நஷ்ட ஈட்டை சென்னையிலும் சில ஜில்லாக்களின் தலைநகரங்களிமுள்ள சில எய்டட் பாடசாலைகள் தான் வாங்கினதாக தெரியவருகின்றது. இந்த ரேட்டை கவனிக்கின்றபொழுது வெகு வேடிக்கையாக இருக்கின்றது. எந்த யுகத்தில் அரசாங்கத்தினர் ஏற்படுத்தினர்களோ தெரியவில்லை. இவ்வளவு குறைந்த ரேட்டில் எவ்வித ஏழ்மை கிராமப் பாடசாலையும் பிள்ளைகளுக்கு கல்வி கற்பிக்க இயலாது. ஆதலின் இந்த ரேட்டை அரசாங்கத்தார் நான்கு அல்லது ஐந்து தரம் உயர்த்திவிட வேண்டும். அல்லது உயர்த்திக் கொடுக்க ஏற்பாடு செய்வதுதான் உசிதம். அவ்விதம் உயர்த்தப்படின் நமது இராஜதானியில் பெண் கல்வி ஒரு அளவு விருத்தியாகுமென்பதில் ஐயமில்லை. இவ்வித நஷ்ட ஈடு ஆண்பாடசாலைகளில் வாசிக்கும் பெண்பிள்ளைகளுக்கும் உண்டு. ஆதலின் இவ்வித நஷ்ட்ட ஈட்டை வாங்காத அநேக எய்டட் பாடசாலைகள் அந்தந்த ரேஞ்சிலுள்ள டிப்டி இன்ஸ்பெக்டர்களுக்கு எழுதி நஷ்ட ஈட்டைப் பெற்றுக் கொள்ளலாம். இன்னும் அந்தந்த ரேஞ்சிலுள்ள ஆசிரிய மானேஜர்கள் கூட்டங் கூடி அரசாங்கத்தார்க்கு இந்த ஸ்டாண்டர்ட் ரேட்டை உயர்த்திக்கொடுக்கும்படி தீர்மானங்கள் அனுப்பிவைத்தால் அரசாங்கத்தார் கவனிப்பார்களென்பதில் ஐயமில்லை.

# சென்னை மகாண கல்வி மகா நாடு

கடந்த மே மாதம் மூன்றும் வாரத்தில் திருச்சியில் நடந்த கல்வி மகாநாடு மைசூர் கல்வியிலாகா அதிகாரியாகிய ஸ்ரீமான், என். எஸ். சுப்பராவ் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்றது. அவர் தமது முடிவுரையில் ஆரம்பா சிரியர்கள் சம்பந்தப்பட்ட மட்டில் கூறியவைகளை ஒவ்வொரு ஆரம்பாசிரியனும் கவனிக்கத்தக்கது. அவர் கூறியதாவது "இம் மகா நாட்டில் ஆரம்பாசிரியர்கள் முன்னேற்றத்தைப்பற்றியோ, அவர்கள் குறைபாடுகளைப் பற்றியோ ஒன்றுமே கவனிக்காதது இம் மகா நாட்டிலுள்ள பெரிய ஒரு குறைபாடாகும். நானும் டைரெக்டர் ஆகும் வரையில், ஒரு ஆரம்பப் பாடசாலையையாவது பார்வையிட்டது கிடையாதென்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஆரம்பப் பாடசாலைகள் நமது நாட்டிலுள்ள கல்விச் சாலைகளில் மிகவும் முக்கியமானவை. ஆரம்பாசிரியர்கள்தான் நமது நாட்டின் புராதன கல்வியையும், நாகரீகத்தையும், தேசாபிமானத்தையும் பாழடையாமல் விருத்தி செய்துவருகின்றார்கள். அத்தகைய ஆசிரியர்களை நாம் அறவே மறந்துவிட்டோம். ஆதலின் இத் தென்னிந்திய ஆசிரிய சங்கமானது ஆரம்பக் கல்வி சம்மந்தப்பட்டமட்டில் கொஞ்சம் ஊக்கம் எடுத்துக்கொள்ளவேண்டும். மைசூரில் ஒரு தடவை ஒரு ஆரம்பாசிரியனும், மனைவியும், ஒரு பிள்ளையும் சுகமாக குடும்பத்தை நடத்த 25 ரூபாய் கொடுத்தால் அல்லாது அவர்கள் சுகமாக வாழமுடியாது என்பதாக கணக்கெடுத்தார்கள். ஆனால் ஒரு உபாத்தியாயர் ரூ. 15 தான் சம்பாதிக்கின்றார். நான் இவ் வுபாத்தியாயர்களை எவ்விதம் இந்த 15 ரூபாயில் ஜீவனம் செய்கின்றீர்கள் என்பதாக கேட்டேன். நாங்கள் கடந்த ஒரு வருஷமாக ஒரு வேளைதான் சாப்பிடுகின்றோம். கையிலுள்ள சொத்துக்களை யெல்லாம் விற்று ஜீவிக்கின்றோம் என்பதாக கூறினார்கள். ஆதலால் இனியாவது ஒவ்வொரு தாலூக்கா போர்டும் ஒரு ஆரம்பா சிரியன் சுகமாக வாழ்வதற்கு ரூபாய் 25 கொடுக்க ஏற்பாடு செய்வார்களென்று நம்புகின்றேன் என்பதாகக் கூறினார்.

# கோபால கிருஷ்ண கோகலேவின்

## ஜீவிய சரித்திரம்.

1866—1915

(பாண்டு ரங்கன்—திருச்சி)

### இந்திய சட்ட சபை

நமது கோகலே 1904-ம் வருஷம் ஸர். பிரோஸ்ஷா மேதா என்பவர் இந்திய சட்ட சபையை விட்டு இராஜிநாமா செய்து நீங்கியதிலிருந்து பம்பாய், சட்டசபையால் தேர்ந்தெடுக்கப்பட்டு அச்சபையின் அங்கத்தினராகவே மரண பரியந்தம் இருந்தார். சட்டசபையிலுள்ள ஒவ்வொரு அங்கத்தினரும் இவரது வாக்கு வன்மையைக்கண்டு ஆச்சரியப்பட்டார்கள். இவரது நோக்கம் அரசாங்கத்தை எப்பொழுதும், எதிர்த்து பேசவேண்டுமென்பதல்ல. அரசாங்கத்திடத்திலுள்ள குற்றங்களை கண்டிப்பார். குணங்களைப் புகழ்வார்.

இந்திய சட்டசபையில் வருடா வருடம் வரவு செலவுக்கணக்கொன்று வாதத்திற்கு வருவதுண்டு. அப்பொழுது அங்கத்தினர்கள் அரசாங்கத்திலுள்ள குறைகளையும், செய்ய வேண்டிய சீர்திருத்தத்தையும் எடுத்துரைப்பது வழக்கம். நமது கோகலே எடுத்துரைக்கும் விஷயங்களெல்லாம், தக்க காரணங்களோடும், கணக்குகளோடும் கூடியிருக்கும். இவர் கேட்கும் கேள்விகளுக்கு சில சமயங்களில் அரசாங்கத்தார் பதிலளிக்க முடியாமல் திகைத்து நிற்பார்கள். அப்பொழுது உத்தியோகஸ்தர் மனத்தில் பயமும், அல்லாதவர்கள் மனத்தில் ஆனந்தமுமுண்டாகும். இவர் மிதவாதி, ஆதலின் கவர்ன்மெண்டார் இவர் வார்த்தைகட்குத்தகுந்த மரியாதை வைத்தார்கள் “இவர் பட் ஜட்டில் ஒரு வருடம் கீழ்கண்ட விஷயங்களை வெளியிட்டார்.

(1) நம் நாட்டு மக்கள் அதிக ஏழ்மைத் தன்மை வாய்ந்தவர்களாகையால் அனுவசியமாக அதிகப்படியான வரி போடக்கூடாது.

(2) செலவை சர்க்கார் கூடுமானவரையில் குறைக்கவேண்டும். இருப்புப்பாதை முதலிய விஷயங்களில் அனுவசியமாக பணம் செலவழிக்கக்கூடாது. எல்லா இலாகாக்களிலும் உயர்ந்த உத்தியோகங்களைக் கொடுக்கவேண்டும். இதனால் குறைந்த சம்பளத்தில் நன்றாக வேலை செய்ய அகப்படுவதுடன் மொத்த இராஜாங்கச் செலவும், குறையும்.

(3) எச்செலவும் போக மிகுந்துள்ள பணத்தைக் கொண்டு பாமர இருளடைந்த இந்நாட்டில் வித்தியா விளக்கை ஏற்றச் செலவிடவேண்டும். இப் பணத்தின் ஒரு பகுதியை சுகாதார விருத்திக்காக உபயோகப்படுத்த வேண்டும்.

(4) உப்புவரி தணிக்கப்படவேண்டும். இந்தியக் கைத்தொழிலை அரசாங்கத்தார் அபிவிருத்தி செய்யவேண்டும்.

[5] க்ஷாம நோயால் வருந்திக் கொண்டிருக்கும் இத்தேசத்தில் “மிகுதி” காட்டும் “பட்ஜட்”டுகளை தயாரிக்கக் கூடாது.

[6] வருஷாந்திரம் 1500-க்கு மேலுள்ள வரும்படிக்குத்தான் “இன் கம் டாக்ஸ்” வருமானவரி போடவேண்டும்.

### சர்வகலாசாலைச் சீர்திருத்தம்.

நமது இந்தியாவில் பூர்வீகத்தில் லார்ட் வில்லியம் பெண்டிங்கு இராஜப் பிரதிநிதியாக வருமுன்னரே, ஸம்ஸ்கிருத பாடசாலைகளும், பாரசீகப் பாடசாலைகளும் அதிகமாக இருந்தன. வங்காளத்தில் மாத்திரம் சில ஆங்கில பாடசாலைகள் நடத்தப்பட்டுவந்தன. நமது நாடு முழுதும் ஸம்ஸ்கிருத வித்வான்களும், பாரசீக வித்துவான்களும், தமிழ் வித்துவான்களும், தெலுங்கு வித்துவான்களும் நிரம்பியிருந்தனர். இவர்களுக்கு தம் நாட்டுக் கல்வி



யைத் தவிர மேல்நாட்டு நாகரிகம், அந்நாட்டுக் கல்வி, சாஸ்திரங்கள் முதலியவற்றுள் யாதொன்றும் தெரியாது. அறிய பெரிய நூல்கள் யாவும் ஆங்கிலத்தில் தான் அக்காலத்தில் இருந்தன. ஆங்கில பாஷா ஞானம் இருந்தாலன்றி அவைகள் அறிதல் அசாத்தியம். இராஜாங்கத்தாருக்கும் இந்தியர்களை உத்தியோகத்தில் வைத்துக்கொண்டால் அரசியல் செலவு மிகவும் குறையுமென்ற எண்ணம் மனதில் உதித்தது, ஆதலின் பெண்டிங் பிரபுவும், அவர் மந்திரி மெகாலேயும் சில முக்கிய இந்தியத்தலைவர்களுடன் யோசித்து இந்தியாவில் எப்படியாவது ஆங்கிலப் படிப்பை விருத்தி செய்ய வேண்டுமென்று யத்தனித்தார்கள்.

ஆங்கிலப் பாடசாலைகள் பல விடங்களில் ஸ்தாபிக்கப்பட்டன. பாதிரி மார்களும், மற்றவர்களும் பாடசாலைகளை வைத்து பரிபாலிக்க ஆரம்பித்தனர். இவர்களுக்கு அரசாங்கமும் ஏராளமான பணத்தைக் கொடுத்தது. ஆங்கிலம் கற்ற அநேகர் கம்பனி உத்தியோகங்களில் அமர்ந்தனர். அரசாங்கத்தில் அடிமை உத்தியோகங்கள் வகிக்க, ஜனங்களுக்கு ஆசை பிறந்துவிட்டது. அந்த காலத்தில் ஏற்பட்ட மோகம்தான் இன்றும் நம்மை விட்டபாடில்லை. ஜனங்களும் ஆங்கிலப் படிப்பில் ஒருவித ஆசை வைத்துவிட்டனர்.

காலக் கிரமத்தில் நாடெங்கும் பாடசாலைகளும், கல்லூரிகளும் பரவிவிட்டன. டல்ஹௌஸி பிரபு, கல்கத்தா, பம்பாய், மதராஸ் முதலிய பட்டணங்களில் பல் கலைக் கழகங்கள் ஸ்தாபித்தார். நாளுக்கு நாள் பி. ஏ. பட்டதாரிகளுக்கு நல்ல உயர்ந்த உத்தியோகங்கள் கிடைத்தன. பிறகு பெரிய உத்தியோகங்களில் காலி யில்லாமல், குமாஸ்தா உத்தியோகங்கள் கிடைத்து வந்தன. தற்போது அதற்கும் வழியில்லாமல் பட்டதாரிகள் திண்டாடிக் கொண்டிருக்கின்றனர். மிகவும் பரிதாபம்.

இவ்வாறு நம் நாட்டில் உயர்தரக் கல்வி அபிவிருத்தி யடைந்தும் பிரயோஜனமென்ன? அநேக கிராமங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் எழுதப்படிக்கத் தெரியாமல் பாமர இருளில் மூழ்கி இருக்கின்றனர். நம் நாட்டில் நான்கு குழந்தைகளில் ஒரு குழந்தைதான் படிக்கின்றது. ஐந்து கிராமங்களில் ஒரு கிராமத்தில் தான் பாடசாலை இருக்கின்றது. ஒவ்வொரு குக் கிராமத்திலும் ஆரம்பப் பாடசாலைகள் ஏற்படுத்தப்படவேண்டும் இதனால் உயர்தரக் கல்வி வேண்டாமென்பதன்று. இருவிதக் கல்வியும் நம் நாட்டிற்கு அத்தியாவசியமானவை. ஜனங்களும் துரைத்தனத்தாரும் இது விஷயத்தில் ஒத்துழைத்தாலல்லாது நமது நாட்டில் தீவிரமாக கல்வி பரவுவதற்கு வழியில்லை.

நமது கோகலே இந்திய சட்டசபையிலுழைக்குங் காலத்தில் கர்ஸன் பிரபு கவர்னர் ஜெனராலாக இருந்தார். இவர் சுறுசுறுப்பும், புத்தி கூர்மையும் உள்ளவர். இவர் கல்வியிலாகாவை சீர்திருத்தம் செய்ய எண்ணங்கொண்டு சர்வகலாசாலைக் கமிஷன் ஒன்றை நியமித்தார். அக்கமிஷன் வெளியிட்ட அறிக்கையின் பயனாக இந்தியா கவர்ன்மெண்டார் சர்வ கலாசாலைச் சீர்திருத்தச் சட்டம் ஒன்று தயாரித்தார்கள். கல்லூரிகளில் போதிக்கும் கல்வியின் குணத்தை மேலோங்கச் செய்யவும், இதற்காகச் செனேட்டிற்குப் புதிய அங்கத்தினர்கள் நியமிக்கப்படவேண்டுமென்றும், ஆனால் அவர்களின் சங்கியைக் குறைத்து, ஒருவாறு துரைத்தனத்தாரின் ஆதீனர்களாக அவர்களைச் செய்ய வேண்டுமென்பதும் இச் சட்டத்தின் நோக்கம். இதை இந்தியர்கள் ஆமோதிக்கவில்லை. இச்சட்டம் வித்தியா விஷயங்களில் சர்வ கலாசாலைகளின் சுவாதந்திரியத்தை குறைத்தது. மேலும் கவர்ன்மெண்டார் நியமிக்கும் அங்கத்தினர்கள் சர்க்கார் சார்பாகவே பேசினார்கள். ஜனங்களால் அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்படுங்காலத்தில் அபஜயமடைந்தால், கவர்ன்மெண்டாராவது தங்களை நியமிக்க வேண்டும் என்று கருதி சிலர் சர்க்கார் மனம்போல் நடந்து கொண்டனர். செனேட்டின் சுவாதந்திரியம் மறந்தே போயிற்று. செனேட்டு கவர்ன்மென்டுக் குட்படாமல் சுவாதந்திரிய முள்ளதாக இருக்கவேண்டுமென்பது நமது கோகலேவின் அபிப்பிராயம்.

[தொடரும்]

# இந்திய வர்த்தமானம்

### பூனா மகாநாடு

ஜூலை மாதத்தில் ஸ்ரீமான் எம். எஸ். ஆனேயின் தலைமையின் கீழ் காங்கிரஸ் மகாநாடு கூடியது. இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் சுமார் 100 தலைவர்கள் விஜயம் செய்தனர். சட்டமறுப்பை நிறுத்திவிடுவதை ஆதரித்தும் ஆக்ஷேபித்தும் நிபந்தனைகளை விதித்தும் பல தலைவர்கள் பேசினார்கள். மூன்று நாட்கள் விவாதம் நடந்தது. கடைசியில் மகாத்மா காந்தி தமது அபிப்பிராயத்தை வெளியிட்டு சுமார் 1½ மணி நேரம் பேசினார். பிறகு சட்ட மறுப்பை நிபந்தனையின்றி விட்டுவிடவேண்டுமென்ற பிரேரணை ஓட்டுக்கு விடப்பட்டுத் தோற்றுப் போயிற்று. உடனே ஸ்ரீமான் ஆனே சட்டமறுப்பு இயக்கம் நிறுத்திவைக்கப்பட்டிருக்கும் காலம் முடிந்ததும் பழய நிலைமையே திரும்பவு மேற்படுமென்று அறிவித்தார். ஸ்ரீமான் ஜம்னா தாஸ் துவாரக தாஸ் கவர்ன்மெண்டுடன் கவுரவமான ராஜியை ஏற்படுத்தும் நோக்கத்துடன் மகாத்மாஜி ராஜப் பிரதி நிதியை நிபந்தனையின்றி பேட்டிகாண அனுமதிக்கவேண்டுமென்று, பிரேரேபித்தார் ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாச்சாரியார் இதை ஆமோதித்தார்.

14-ந்தேதி மகாத்மாஜி ராஜப் பிரதிநிதியின் காரிய தரிசிக்கு பேட்டிக்காண தந்தி யடித்தார். அதற்கு அவர் காங்கிரஸ் சட்டமறுப்பு இயக்கத்தை கைவிட்டாலொழிய காந்தியைப்பார்க்க முடியாதென்பதாக பதிலளித்து விட்டார்.

---

### மகாத்மாஜியின் அலுவல்கள்

மகாத்மா காந்தி ஆமதாபாத்திற்குச்சென்று ஒரு நண்பர் வீட்டில் தங்கினார். ஸ்ரீமதி மீரா பென்னை சபர்மதி சிறைச்சாலையில் பேட்டி கண்டு, தாம் கண்ணியமான சமாதானத்திற்காக பாடுபடுவதாகவும் கவர்ன்மெண்டார் அதற்கு இடங்கொடுக்காமையால், தமது முயற்சியைத்தாம் இனியும் மேலே தொடரப் போவதாயும் மகாத்மாஜி கூறினார்.

---

### ஸ்ரீமான் ஸென் குப்தாவின் மரணம்

---

வங்காளத் தலைவரும், கல்கத்தாவின் மாஜி மேயருமான ஸ்ரீமான் ஜே. எம். சென் குப்தா காச்சியில் 23-ம் தேதி ரத்தக் கொதிப்பினால் ஏற்பட்ட வலிப்பால் இறந்து போய்விட்டார், அவருடைய பிரேதம் ரயிலில் கல்கத்தாவுக்கு கொண்டுவரப்பட்டது. சுமார் 6 லக்ஷம் ஜனங்கள் அம்மகானுடைய ஊர்வலத்தை தொடர்ந்து சென்றார்களாம்.

---

### நான்கு தேச ஒப்பந்தம்.

இதாலி, ஜெர்மனி, பிரான்ஸ், இங்கிலாந்து ஆகிய நான்கு தேசங்களுக்கும் பரஸ்பரம் தாக்குவதில்லையென்றும் சமாதானத்தை நிலைநிறுத்தவும் ஆயுதப் பரிஹாரணம் விஷயமாகவும் ஏற்பட்ட ஒப்பந்தம் சென்றவாரம் ரோம் நகரத்தில் ஸீனர் முஸோலினியின் முன் அவருடைய பேனாவைக்கொண்டே நான்கு தேசங்களின் பிரதிநிதிகளாலும் கையெழுத்திடப்பட்டது. இதன் மூலம் ஐரோப்பாவில் 10 வருஷ காலத்திற்குச் சமாதானம் உறுதிப் படுமென்று நம்பப்படுகிறது.

---

### ரூஸ்வெல்ட் விவாக ரத்து.

அமெரிக்கக் குடியரசுத் தலைவரின் இரண்டாவது பிள்ளை மிஸ்டர் எலியட் ரூஸ்வெல்டு தமது மனைவி தம்மைக் கொடுமையாக நடத்துவதாக விவாக ரத்து மனுக்கொடுத்தார். மனைவியும் இதேமாதிரிப் புருஷன் மீது புகார் கூறி மனுக்கொடுத்தார். கோர்ட்டு மனைவியின் மனுவை யேற்றுத் தீர்ப்பளித்தது.



### மகாத்மாஜியின் உத்தேசம்.

மகாத்மாஜி பூனாவிலிருந்து புறப்பட்டுப் பம்பாய்வழியாக ஆமதாபாத்திற்குச் சென்று விட்டார். பத்திரிகைப் பிரதி நிதிகள் பூனாவிலும் பம்பாயிலும் அவரைப்பேட்டி கண்டு விசாரித்தனர். ராஜப்பிரதிநிதி தமக்குப் பேட்டியளிக்கப் பிடிவாதமாக மறுத்து விட்டது உலகத்திலேயே இதுவரையிலில்லாத ஒரு கோட்பாட்டை ஸ்தாபிப்பதாயும், ஆயுதமெடுத்துக் கலகம் செய்தவர்களிடம் கூட அவர்கள் விரும்பினால் ராஜி பேச இதுவரையில் எந்தக் கவர்ன்மெண்டும் மறுத்ததில்லையென்றும் தாம் கண்ணியமான சமாதானத்தை விரும்புவதாயும், ராஜப் பிரதிநிதியோ காங்கிரஸ் அடியோடு சரணமடைய வேண்டு மென்று விரும்புவதாயும் தாம் இதற்குச் சம்மதிக்க முடியாதென்றும், ஆச்ரம வாசிகளைப் பார்க்கவும், சில ஆச்ரம வேலைகளைக் கவனிக்கவும், அங்கு செல்லுவதாயும், உபவாஸத்தின் காரணமாகத்தாம் சிறையிலிருந்து வெளிவந்ததால், கவர்ன்மெண்டுக்கு முன்னறிக்கை யின்றிச் சட்டமறுப்பு வேலை எதையும் செய்யப்போவதில்லையென்றும், ராஜீய வேலைகளை விட்டுப் பூராவுமே ஹரிஜன வேலை மாத்திரம் செய்வது தமக்குச் சாத்தியமில்லையென்றும், பொதுஜனச் சட்ட மறுப்பு காங்கிரஸ் தலைவரால் இப்போதைக்கு நிறுத்திவைக்கப்படுமென்றும், காங்கிரஸ் ஸ்தாபனங்கள் ரகஸ்யமாகவே கூடி வேலைசெய்ய முடிவதால் அவையும் கலைக்கப்பட்டு விடுமென்றும் அவர் கூறினார்.

---

### மைசூர் ரயில் பாதையில் விபத்து.

மைசூர் ரயில்பாதையில் பிரூர்-ஷிமோகா பிரிவில் டரிகிர் என்ற ஸ்டேஷனில் நின்று கொண்டிருந்த பாசஞ்சர் வண்டியுடன் இன்னொரு வண்டியின் பின்பாகம் மோதியதால், மிகுந்த சேதமேற்பட்டு விட்டது. 17 பேர்கள் கொல்லப்பட்டு 15 பேர்கள் காயமடைந்தனர். ரயில்வேக்குச் சுமார் ஒரு லக்ஷம் ரூபாய்க்கு மேல் சேதமேற்பட்டிருக்கிறது. அந்த விடத்தில் ரயில் பாதைமேலே ஏறிச் செல்லுகிறது. முன்னால் போய்க்கொண்டிருந்த ஒரு வண்டியிலிருந்து அதன் கடைசி மூன்று வண்டிகள் பிரிந்து பின்னால் ஓடிவந்து இறக்கத்தில் வேகம் பெற்று, ஸ்டேஷனில் நின்றுகொண்டிருந்த வண்டியுடன் மோதின.

---

### மந்திரிகளின் பயம்.

இந்தியா மந்திரி பார்லிமெண்டுக் கூட்டுக் கமிட்டி முன்கொடுத்த சாக்ஷியத்தைக் கண்டு டில்லியில் சர்க்கரைத் தொழில் சம்மந்தமான மகா நாட்டிற்குச் சென்றிருந்த மாகாண மந்திரிகள் பீதியடைந்து ராஜப்பிரதிநிதியைப் பேட்டி கண்டனர். ராஜப் பிரதிநிதி அவர்களுக்குத் தைரியம் கூறி, அவர்களுடைய பீதிக்கு ஆதாரமில்லையென்றும், மாகாண சுய ஆட்சியில் குறைவேற்படாதென்றும், அவர்கள் தெரிவித்தவற்றைக் கவனிப்பதாயும் அறிவித்தார்.

---

### திருப்பதி தேவஸ்தானம் கமிஷனர்.

திருப்பதி தேவஸ்தானச் சட்டம் நிறைவேற்றப்பட்டு அதன்படி தேவஸ்தானக் கமிட்டி நியமிக்கப்பட்டதும் சித்தூர் ரெவின்யூ டிவிஷனல் ஆபீஸர் ஸ்ரீமான் ஸி. துரைஸாமி கவுண்டர் தற்காலிகமாகத் தேவஸ்தானக் கமிஷனராக வேலை பார்த்தார். இப்போது சென்னை ஹிந்து தேவஸ்தான போர்டு மெம்பரான ஸ்ரீமான் கே. சீதாராம ரெட்டியார் நிரந்தரமாகத் திருமலை திருப்பதி தேவஸ்தானக் கமிஷனராக நியமிக்கப்பட்டு வேலை யேற்றுக்கொண்டுவிட்டார். தேவஸ்தான போர்டுக்கு ராவ்பகதூர் டி. கிருஷ்ண மூர்த்தி நியமிக்க படுவாராம்.

---

தென் காலிபோர்னியாவில் வசிக்கும் மிக வயதான ஸ்பெயின் தேசத்து ஸ்திரீ. இவளுக்கு இப்பொழுது வயது 128. பழைய மெக்ஸிகன் யுத்தம், மெக்ஸிகோவின் புராதனக் கதைகள் முதலியவற்றை மிகத்தெளிவான ஞாபகத்துடன் இவள் எடுத்துக் கூறுகிறாளாம்.



சேலம் ஜில்லா ஆசிரிய மானேஜர்கள் சங்கத்தின் தலைவரும், கல்விச் சபைத் தலைவரும், தாலூகா போர்ட் தலைவரும், ஆகிய ஸ்ரீமான், ராவ் சாஹிப் எஸ். பி. இராஜமாணிக்கம் பண்டாரம் அவர்கள், 18-3-33-ல் நடந்தேரிய சேலம் ஜில்லா ஆசிரிய மானேஜர்கள் மகா நாட்டில் வரவேற்புக் கமிட்டி தலைவராக இருந்து ஒரு அருமையான ஒரு சொற் பொழிவை நிகழ்த்தினர்.

"நமது நாட்டில் லோகல் போர்டுகளாவது அரசாங்கமாவது எல்லா ஆரம்ப பாடசாலைகளை நடத்துவது முடியாத காரியமாகும். ஆதலின் பிரைவேட் மானேஜ் மென்டுகளால் நடத்தப்படும் எய்டட் பாடசாலைகள் நமது நாட்டில் இருந்தே தீரவேண்டும். அதற்கு அரசாங்கமும் இப்பாடசாலைகளுக்கு போதுமான பொருளுதவியை தாராளமாக கொடுக்கவேண்டும்.

* * * *

கிராம உபாத்தியாயர்கள் தான் எதிர்கால ஜன சமூகத்தை ஒழுங்குபடுத்தி நமது நாட்டை முன்னுக்கு கொண்டுவரும் பெரும் பாரத்தை யுடையவர்கள். ஆதலின் உபாத்தியாயர்கள், வறுமையினாலோ, அரசாங்கத்தார் தம்மை கவனிக்காததினாலோ, சில தேச ஊழியர்கள் தங்கள் மீது தயாள சிந்தனையைக் காட்டாததினாலோ மனச் சோர்தல் அடைதல் கூடாது. பொதுப் பாடசாலைகளுக்கும் உதவி பெரும் பாடசாலைகளுக்கும் ஏற்படும் போட்டா போட்டிகள் ஒருபுறமிருக்க, அரசாங்கத்தார் இவ்வுதவிபெரும் பாடசாலைகளுக்கு போதுமான கிராண்டு கொடாததும் மிகவும் வருத்தமான சம்பவம்தான். கடந்த இரண்டு மூன்று வருஷங்களாக கிராண்டு குறைந்தே வந்துகொண்டிருக்கின்றது. இதில் முக்கியமாக ஆசிரிய மானேஜர்களுக்குத் தான் அதிக நஷ்டமும், கஷ்டமும் ஏற்பட்டிருக்கின்றது. ஆனால் இவ்வருஷம் சர்க்காரில் அதிகப்படியான பணம் இருப்பதாகத் தெரிகிறது. இவ்வருடமாகிலும் அரசாங்கத்தார் இவ்வுதவி பெரும் பாடசாலைகளுக்கு தாராளமாகக் கிராண்டுகள் கொடுப்பார்களென்று நம்புகின்றேன்."

# பெற்றோர் சங்கம்.

(சி. வேங்கடேச அய்யர், பி. ஏ., எல். டி., டிப்டி இன்ஸ்பெக்டர்)

(முன் தொடர்ச்சி)

தற்காலம் பையன்களிடதேர்ச்சியைப்பற்றி ஒரு ரிபோர்டு வருஷம் ஒரு முறையோ இருமுறையோ பெற்றோருக்கு சிலர் அனுப்புகிறார்கள் "நன்றாகப் படிக்கின்றான்" என்ற ரிபோர்ட்டுக்கு மதிப்பு அதிக பிராவிடினும் சரிவரப்படிக்க வில்லை' என்றதினால் சில இடங்களில் சிறுவர்கள் அன்று தகுந்தபடி சிக்ஷிக்கப்படுகிறார்கள். மற்றும் சில இடங்களில் இந்த சீட்டின் மதிப்பு கூடத் தெரியாமல் அடிக்கடி தம் பல்பொடி கட்டவோ வேறு எதற்கோ உபயோகமாகிறது. அதே மாதிரி டாக்டர்கள் பாடசாலைகளில் உள்ள மாணாக்கர்களைப் பரிசைஷ செய்து அவர்கட்குள்ள வியாதி இன்னதென அறிவித்தால் அதுவும் அநேகமாய்ப் பயன்படுவதில்லை. ஆகவே, இருதிறத்தினரும் நேரில் கலந்து ஆலோசியாமல் கற்பிக்கும் கல்விக்கு இம்மகிமை இருந்து வருகிறது. இக்காலத்தில் இவ்வித சந்திப்புக்கு இடம் இருக்கிறதென்பதாகச் சொல்லுகிறார்கள். அவையாவன.

1. ஒரே பாடசாலையில் படித்துவிட்ட மாணாக்கர்கள் வருஷம் ஒரு முறை சந்திக்கும் நாள்.
2. சுகாதாரக் கொண்டாட்டம்.
3. கல்வி வாரக் கொண்டாட்டம்.
4. மகா நவமிக் கொண்டாட்ட தினங்கள்.
5. பாடசாலையின் வருஷாந்திரக் கொண்டாட்ட பரிசளிக்கும் தினம்.
6. சட்டசபை முதலிய இடங்கட்கும் மெம்பர்கள் தேர்ந்தெடுக்கும் தினங்கள்.
7. ஊர் திருவிழா.

இக்காலங்களையே சுப தினங்களாக அக்காலங்களில் சபை கூடும்படி ஒருவித ஒழுங்கு ஏற்படுத்தி நடத்திவரலாம். ஆசான்கள் யாவரும் இவ்விஷயத்தில் ஊக்கம் காட்திட முன் வருவார்களென நம்புகிறேன்.

இவ்விதம் ஏற்படுத்திய சங்கத்தால் உண்டாகும் நன்மையைப்பற்றி வினவின் நோக்கத்தில் எடுத்துக் காட்டிய முதன்மைத்தாகும். தேன் எடுப்பவன் தேன் சேகரிப்பதோடு விடாமல் தேன் மெழுகையும் சேர்ப்பதோடு தேனின் வளர்சசி முதலிய வற்றையும் அறிகிறான். அது போலவே நோக்கத்தில் சுருக்கமாகக் கூறியதையே நாமடையும் பலனாக எண்ணிய போதிலும் உப பலன்களும் சில உள.

எ. ஸ்தல சுய ஆட்சியாரால் ஏற்படுத்தப்பட்ட பாடசாலைகளிலும் கூட கல்வியின் அபிவிர்த்திக்கேற்க பாடசாலைக் கட்டிடமும் உபகரணங்கள், ஆசான் இவைகள் சப்ளை செய்வது கடினமாகிறது. பாடசாலையின் பொது நிலைமையை உயர்த்தவும் கஷ்டப்படுகிறார்கள். அக்காலங்களில் பெற்றோரின் பொருள் உதவியையும், மனோ ஊக்கமும் யாம் கண்டிருக்கிறோம்.

பி. ஆசான்களில் பெரும்பாலர் மிடியினால் வருந்துவதைப் பார்க்கிறோம். 'அடகெடுவாய் பலதொழிலுமிருக்கக் கல்வியதிகமென்று கற்றுவிட்டோம்,' என்ற பாடல்படியாத குரு இரார். கல்வி புகட்டுவதை ஒரு தொழிலாக எண்ணில் அது மற்ற தொழில்களைப்போல பிரதி பிரயோஜனத்தை இளமையில் அளிக்காது. என்றும் அது எத்தொழிலைக்காட்டிலும் கண்ணியமானது, பாத்திற் கனுகூலமானது, எத்தேயத்தும் எக்காலத்தும் கல்விமான்கள் அரசராலும் ஜனங்களாலும் புகழப்பட்டிருந்தபோதிலும் மிடியால் வருந்திய சரித்திரங்கள் அநேகமுள. எணி, தோணி இவைகளைப்போல் பிறர்

தம்பதவியை யுயரும்படியோ, கரையேறவோ செய்வார்கள், தாம் இருந்த நிலையை விட்டுப் பெயரார். இத்தகைய குருக்களின் கட்டிடத்தை நீக்கி அவர்கள் மனம் குளிர்ந்து தம் மக்கட்கு நன்கு அறிவைப் புகட்டும்படி செய்ய அவர்கட்கே சக்தியுண்டு. காலாகாலங்களில் அவர்களிட உதவி பெறலாம். ஆதலால் பொதுஜன ஊழியம் செய்ய அவர்கட்கு அவகாசம் ஏற்படும்.

சி. பெற்றோர்களைக் கண்டு பேச அவகாசம் ஏற்படுவதால் பிள்ளைகளிட தேர்ச்சிமாத்திரமன்றி அவர்களிட நிரேகநிடம், ஆஜர் இவைகளையும் கவனிக்க வசதியுண்டு. அப்பொழுதே ஆசானின் திறமை அவர்கள் நன் கறிவதோடு, படிப்பில்லாத சில பெற்றோர்கட்குக் கூட அவகாசம் ஏற்பட்டகாலத்து படிக்கவேண்டுமென்ற அவா உண்டாகும். ஆதலால் கிராமத்தின் முன்னேற்றத்தை ஆசான் கவனிக்கவும் பெற்றோர் ஆசானின் நிலைமையை விருத்தி செய்தற்கும் இடம் உண்டாயிற்று. பெற்றோர்கட்கென இரவு பாடசாலைகளும், பொதுஜன ஊழியத்திற்கு புஸ்தகசாலை, வாசகசாலை அமைத்து அங்கு அரிய பெரிய புஸ்தகங்கள் பத்திரிக்கைகள் படித்தலும், ஆசான்கள் அவைகளை விளக்கிச் சொல்லவும் சந்தர்ப்பம் வாய்க்கும்.

டி. இதுவுமன்றி ஒரு கிராமத்திற்குத் தகுந்தபடி உபாத்தியாயர் அவையில் அவர் அவ்வூரைத்தான் சொந்த ஊராக்கிக்கொள்கிறார். தற்காலம் நடைபெறு நின்ற மாறுதல்கள் அவருக்கில்லை. கிராமத்திற்கும் க்ஷேமம் உண்டாகிறது. நாளடைவில் கட்டாயப்படிப்புக்கு கூட இடம் உண்டாகிறது.

இதர நாடுகளில் இவ்வாறு சங்கங்கள், சபைகள் உண்டா என வினவின் அவைகள் அநேக தேயங்களில் நடைபெற்றுவருகின்றன வென்றே சொல்லலாம். இங்கிலாந்து தேசத்தில் ராஜாங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்ட பாடசாலைகளைவிட பெற்றோர் சபைகளினால் ஏற்படுத்தப்பட்ட பள்ளிகளே பதிகம். பள்ளியில் படியாத ஆண் பெண் இல்லை. பாடசாலை நேரங்களில் தெருக்களில் அலையும் பிள்ளைகளைக் காணமுடியாது. அமெரிக்கா, ஜெர்மனி முதலிய தேசங்களிலும் இவ்வாறே. பொதுப்படையுடன் ராணுவ வீரராகவும் படிக்கவேண்டிய தவசியமென ஜனங்களே வற்புறுத்துகிறார்கள். நம் இந்தியாவோடு சேர்ந்த பர்மா தேசத்தைப் பார்ப்போம். அங்கு புத்த மதத்தைப் போதிக்கும் குருக்கட்கு 'பொங்கி' என்று பெயர். அவர்கள் வசிக்க மடங்கள் உண்டு. அவர்களிடத்தில் பக்தியுடனும், மரியாதையுடனும் ஜனங்கள் நடந்து கொள்வார்கள். அவர்கட்கு அன்ன வஸ்திரம் கொடுத்து ஆதரிக்கிறார்கள். அவர்கள் வெளிச்சென்று பிக்ஷை யேற்கும் காலம் போக தம் காலத்தை மத ஆராய்ச்சி போதனைகளில் கழிக்கிறார்கள். இதுவுமன்றி அவர்கள் வசிக்கும் மடங்களே சிறுவர் சிறுமிகள் படிக்கும் பாடசாலைகளாகும். பர்மாவில் பர்மா பாஷை கற்பிக்காத ஆண் பெண் இல்லை. நம் நாட்டிலேதான் 'கீரல் கைநாட்டு' என்றும் 'தற்குறி' என்றும் அநேகர் இருக்கிறார்கள்.

இந்தியாவிலும் பண்டைகாலத்து சில ஆசிரமங்கள் இருந்ததென்றும் அநேக மகான்கள் அவ்விடங்களில் வசித்து வந்தாரென்றும், பெற்றோர்கள் தங்கள் குமாரர் குமாரத்திகட்கு எவ்வித வித்தை கற்பிக்க விரும்புவார்களோ, அவ்வித படிப்பு கற்பிக்கும் குருவைநாடி அவர்களிடம் தம்மக்களை பன்னிரண்டு வருஷம் விட்டுவந்தார்களெனவும் ராஜாக்களும் தனவான்களும் இக் குருக்களை ஆதாரித்தார்களென்றும் படித்திருக்கிறோம். கொஞ்சம் பண்டைய காலத்து பாடசாலைகள் ஏற்பட்டு பெற்றோரின் பூர்ண ஆதரவினால் அவைகள் நடைபெற்றதெனவும் ஒவ்வொரு தொழிலைச் செய்வோரும், அத்தொழிலில் விருத்தியடைந்தாரெனினும் பொதுப்படிப்பில் சிலரே நன்மையடைந்தாரெனவும் காண்கிறோம். இக்காலத்தும் பெற்றோர்களிட உதவி முன்காலம் போலவே சில இடங்களில் இருநது வருகிறது. துவாதசி, அமாவாசை, தீபாவளி, பொங்கல், மகாநவமி, பிள்ளைகளைப் படிக்கவைக்குங்காலம்



தானிய அறுவடைகாலம். தகுந்த ஆசான் பிள்ளைகளை கொஞ்ச வருஷங்கள் விட்டுவைப்பது என்பது தற்காலத்து கிடையாது. உலக பிரசித்தி பெற்ற 'தாகூர்' என்பவர் இம்மாதிரியான பாடசாலைகளை மறுபடி துவக்கவேண்டுமென்றெண்ணி 'சாந்தி நிகேதன்' என்னும் ஒரு ஆசிரமத்தை ஏற்படுத்தி நடத்திவருகிறார். அவரிட மாதிரியை அநேகர் கைப்பற்றுவார்களாக. பொது ஜனங்களின் ஆதரவைப்பெற்று அவர்களால் நன்கு மதிக்கப்பட்டும் அவர்கள் ஆலோசனையோடும் கூட நடைபெறும் பாடசாலைகள் சிலாக்கியமானவை. கவர்ன்மெண்டாரால் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலைகளில் பஞ்சாயத்து, கமிட்டி பாடசாலைகள் இவைகளில் பொதுஜன ஊக்கம் கொஞ்சம் உண்டு. எனினும் பெற்றோர் சங்கம் செய்யவேண்டிய அலுவல்கள் நடைபெற்று வருவதாகக் காணவில்லை.

பெற்றோர் சங்கத்தோடு ஒப்பாக கிராமத்திற்கு நன்மைவிளைவிக்கும் சங்கங்கள் சில உள. அவைகள் ஏதோ சில கிராமங்களிலேயே நடை பெறுகின்றன. கூடுமானால் இச்சங்கத்தையும் அச்சங்கங்களின் பிரிவாகக் கருதவும் கூடும். அவையாவன:—ஐக்கிய நாணயச் சங்கம்; விவசாயிகளின் சங்கம். வரி கொடுப்போர் சங்கம். தொழிலாளர்கள் சங்கம் ஐக்கிய நாணயச் சங்கம், அதன் பிரயோசனம் அதனால் பாடசாலைக்கு உண்டாகக்கூடிய நன்மைகள் இவைகளைப்பற்றி அடுத்த சஞ்சிகையில் பேசுவோம்.

## நீதி வாக்கியங்கள்.

அத்தி முகனை அன்போடு அர்ச்சி
ஆன்ற தெருவலோ சான்றோர் வாசம்
இடுக்கண் விளைக்கும் இன்பந்தவிர்
ஈகைதானை ஈடேற்றுந் துணை.
உப்பிட்டவரை உள்ளளவும் நினை
ஊழியமில்லா உத்தியோகம் பாழ்
எம்பிரான்தன்னை ஏற்றித்தொழு
ஏசுவை எண்ணி எக்காரியமும் துணி
ஐங்குரவர்தம் ஆணையை மீறேல்
ஒன்றே தெய்வம் பலவுள நாமம்
ஓதுவதோடு சாதுவை நாடு
ஔடத மருந்தா யாக்கையே மேல்
அஃகாமென்பதும் வெள்ளெருக்கேயாம்.

---

## உங்களுக்குத் தெரியுமா?

பூமி உருண்டையாய் இருப்பதோடு சுற்றிக்கொண்டும் இருக்கிறது. இதனால் பூலோகம் முழுவதிலும் ஒரே சமயத்தில் ஒரே நேரமாயிருக்க முடியாது. இந்தியாவில் பகல் நேரம் இருக்கும் போது, அமெரிக்காவில் இராநேரமே இருக்கமுடியும். உலகிலுள்ள ஒவ்வொரு நாட்டிலும் மணி எவ்வளவு தூரம் வித்தியாசப் படுகிறதென்று பார்த்தால் விசித்திரமாயிருக்கும். இந்தியாவில் பகல் 12 மணியாயிருக்கும் போது, மற்ற நாடுகளில் என்ன மணியாயிருக்கும் என்பதை கீழே வெளியிடுகிறோம்.

| | | |
|---|---|---|
| ஆம்ஸ்டர்டாம் (ஹாலந்து) | காலை | 6-50 |
| ஏதன்ஸ் (கிரீஸ்) | ,, | 8-30 |
| ஆக்லந்து (நியூஜிலந்து) | மாலை | 6 |
| பிரசல்ஸ் (பெல்ஜியம்) | காலை | 6-30 |
| கெய்ரோ (எகிப்து) | ,, | 8-30 |
| கேப்டவுன் (தென் ஆப்பிரிக்கா) | ,, | 8-30 |
| சிகாகோ (அமெரிக்கா) | இரவு | 12-30 |
| கான்ஸ்டாண்டிநோபிள் (துருக்கி) | காலை | 8-30 |
| டப்ளின் (அயர்லாந்து) | ,, | 6-30 |
| ஹாங்காங் (சீனா) | மாலை | 2-30 |
| எருசலேம் (பாலஸ்தீனம்) | காலை | 8-30 |
| லெனின்கிராட் (ரஷியா) | ,, | 8-30 |
| மாட்ரிட் (ஸ்பெயின்) | ,, | 6-30 |
| மோரிஸ் தீவு | ,, | 10-30 |
| மெல்போர்ன் (ஆஸ்திரேலியா) | மாலை | 4-30 |
| மான்ட்ரீல் (கானடா) | இரவு | 1-30 |
| பாரிஸ் (பிரான்ஸ்) | காலை | 6-30 |
| சிங்கப்பூர் | மாலை | 1-30 |
| டோக்கியோ (ஜப்பான்) | ,, | 3-30 |
| பெர்லின் (ஜெர்மனி) | காலை | 7-30 |
| வியன்னா (ஆஸ்திரியா) | காலை | 7-30 |

(கு. மீ.)

# பாடக் குறிப்பு

பாடம்: கணக்கு.

பாகம்: இடவேலை.

வகுப்பு: 2-வது

நேரம்: 25 நிமிஷம்.

நோக்கம்: அடிக்கோலின் பாகங்களும் அதன் அதன் பிரயோசனங்களும்.

உபகரணம்: அடிக்கோல்கள், ஒரு அங்குல அளவுள்ள துண்டுக் குச்சிகள்.

பீடிகை: அடிக்கோலைக்காட்டி, இது என்ன? இதற்கு வேறு என்ன பெயர் சொல்லலாம்? இது எதால் செய்யப்பட்டிருக்கிறது? இதில் என்னென்ன எழுதப்பட்டிருக்கிறது? என்பன போல் சம்பாஷித்து, புதிய அறிவைத்தொடங்கவும்.

### புதிய அறிவு: விஷயம்

அடிக்கோல்: ஓர் குறிப்பான அளவைக்காட்டும் கோல் அல்லது குச்சி, அடிக்கோல்.

### முறை

உபாத்தியாயர் தன் காலில் பாதச்சுவடுகளால் சுமார் பதின்மூன்று சுவடு தூரமுள்ள ஓர் இடத்தை முன்னதாகவே தெரிந்து குறிப்பிட்டுக்கொள்ளவும். அதன் பின்னர் பாட நேரத்தில், குறிப்பிட்ட இடத்தின் தூரத்தை வித்தியாசமான உயரமுள்ள இரண்டொரு பையன்களைக் கால்களால் அளக்கும்படிசெய்து முறையே ஏதோ (17, 15 கவடி) வித்தியாசமான அளவுள்ளது என்பதை உணர்த்தவும். பிறகு அதே தூரத்தைத் தானும் தன் காலால் அளந்துகாட்டி 13 கவடி தூரம் என்பதையும் கவனிக்கும்படிசெய்து இவைகள் எல்லாம் அளவில் சரிதானோ? இப்பொழுது தெரிந்துகொண்ட வித்தியாசமான அளவுகளைக்கொண்டு இடத்தின் சரியான அளவைக் குறிப்பிடமுடியுமா? இந்த வித்தியாச அளவுக்குக் காரணமென்ன? என்று பிள்ளைகளிடம் கேட்டு ஏற்ற விடைபெற்று ஒவ்வொருவரின் காலும் வித்தியாசமுள்ளதானபடியால் அளவும் வித்தியாசப்படும். ஆகையால் இவைசரியான அளவுகளல்ல என்பதையும் நன்குணர்த்தவும். இதற்குப் பிறகு ஒரு பையனைக் கூப்பிட்டு ஓர் அடிக்கோலையும் கொடுத்து முன் குறிப்பிட்ட இடத்தை அளக்கும்படி செய்து, இதேபோல் வேறு இரண்டு பையன்களிடமும் அடிக்கோல் கொடுத்து அளக்கும்படி செய்யவும். இப்பொழுது மூன்று பையன்களும் அதே இடத்தை அடிக்கோலால் அளந்தார்களே, ஒவ்வொருவரும் அளந்தபோது இடத்தின் தூர அளவு வித்தியாசப்பட்டதா என்று கேட்டு, இக்குச்சியால் அளந்தபோது மூவருக்கும் வித்தியாசமின்றி ஒரே அளவுதூரம் இருப்பதை உணர்த்தி, இக்குச்சியைக்கொண்டு யார் அளப்பினும் வித்தியாசமின்றி ஒரே அளவைக்காட்டுவதால் இது தான் சரியான அளவைக்காட்டும் குச்சி எனவும் தெரிந்துகொள்ளும்படு செய்தபின், இது என்ன? இது ஓர் அளவுகோல். இது எப்பேர்ப்பட்ட அளவுகோல்? குறிப்பான அளவைக் காட்டும்கோல். ஆகையால் அடிக்கோல் என்பது என்ன? ஓர் குறிப்பான அளவைக்காட்டும் குச்சி [கோல்] அடிக்கோல், என்று விஷயத்தில் கண்டபடி வரவழைக்கவும்.

### விஷயம்

பாகங்கள்:—பன்னிரண்டு அங்குலங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

### முறை

அதன்பிறகு ஒவ்வொரு பையனுக்கும் ஒவ்வொரு அடிக்கோலைக் கொடுப்பித்து, அதில் பெரிய எண்களாகப் போட்டிருப்பவைகளை வரிசையாய் வாசிக்கும்படி செய்யவும். 12வரை எழுதப்பட்டுள்ளதென்று வரவழைக்கவும். பிறகு தயாராகவுள்ள ஒரு அங்குல சிறு குச்சிகளை ஒவ்வொருவனுக்கும் ஒவ்வொன்றாகக் கொடுத்து அந்தக் குச்சியால் அளந்தால் அடிக்கோல் எத்தனை பாகம் என்பதைப் பார்க்கும்படிசெய்து, 12-பாகம் என்று வரவழைத்து,



19034

அடிக்கோலில் 12 எண்கள் குறிக்கப்பட்டும் கோடுகளால் 12 பாகமாகப் பிரிக்கப்பட்டு இருப்பதையும், 1 அங்குல நீளமுள்ள சிறு குச்சியால் அளந்தபோது12 தடவை அளந்ததையும் சம்பந்தப்படுத்திக் காட்டி, அடிக்கோல் பன்னிரண்டு சமபாகமாகப் பிரிக்கப்பட்ட ஒவ்வொரு பாகத்திற்கும் பெயர் கேட்டு, தெரியாவிட்டால் அங்குலமென்று சொல்லப்படுகிறது என்பதை சொல்லிக்கொடுத்து, அடிக்கோல் பன்னிரண்டு அங்குலங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது என்ற விஷயத்தை வரவழைக்கவும்.

### விஷயம்

பிரயோசனம்.—(1) பொருள்களின் சரியான நீளம், அகலம், உயரம் என்ன என்பதை அளந்து அறிந்துகொள்ள உதவும்.

### முறை

ஒன்பது அடி நீளமாய் இடத்தைக் குறிப்பிட்டு அடிக் கோலால் அளந்து சொல்லும்படி செய்து, அதன்பிறகு 9-அடிக்கு மேல் 8 அங்குலம் அதிகமாய்க் குறிப்பிட்டு இப்போது அளந்து பார்க்கும்படிசெய்து நீளம் 9 அடி. 8 அங். என்று சரியாய் விடை வரவழைக்கவும். இடத்தை பிள்ளைகளே அளந்து சொன்னபின், இதேபோல் மேசையின் நீளம், அகலம், உயரம் முதலியவற்றைக் குறிப்பிட்டு முதலில் கண் மதிப்பால் அளக்கச்செய்து, அதன் பின் அடிக்கோலால் அளந்து சரியான அளவை வரவழைத்து மேற்படி விஷயத்தை உணர்த்தவும்.

### விஷயம்

(2) அடிக்கோலால் நேர்கோடுகள் வரையலாம்.

### முறை

நீளம், அகலம், உயரம் அளந்து சொன்னபின், இரண்டொரு பையன்களை அழைத்து சாக்பீஸ் கொடுத்து கரும்பலகையில் கோடுகள் வரையும்படி செய்யவும். பிறகு மற்றொரு பையனிடம் அடிக்கோலையும் சாக்பீசையும் கொடுத்து அடிக்கோலின் உதவியால் கோடுகள் வரையும்படி செய்யவும். இப்பொழுது அடிக்கோல் இல்லாமல் வரையப்பட்ட கோடுகளுக்கும், அடிக்கோலின் உதவியால் வரையப்பட்ட கோடுகளுக்கும் உள்ள வித்தியாசத்தை உணர்த்தி; அடிக்கோலால் நேர் கோடுகள் வரையலாம் அல்லது நேர் கோடுகள் வரைய உதவும் என்பதை வரவழைக்கவும்.

பரீக்ஷை:—அடிக்கோல் என்பதென்ன? அது எத்தனை பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது? ஒவ்வொரு பாகத்திற்கும் பெயர் என்ன? அடிக்கோலினால் என்ன பிரயோசனம்? இந்த பெஞ்சின் நீளம் என்ன? அளந்து சொல், உன் சிலேட்டின் நீளம் என்ன? அளந்து சொல்.

க. ப. சு.

அடிக்கோல்

குறிப்பான அளவைக் காட்டும்.

பன்னிரண்டு அங்குலங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

பொருள்களின் சரியான நீளம், அகலம், உயரம் என்ன என்பதை அளந்து அறியலாம்.

நேர் கோடுகள் வரையலாம். (பூங்கொத்து)

எ. எம். எஸ்.

## உபவாசத்தின் பயன்

(மகாத்மா காந்தி)

ஆண்டவன் ஆக்ஞைப்படியே நான் உபவாசத்தை ஏற்றேன். இவ்வாறு நான் சொல்லுவது அநேகருக்கு அதிசயமாயிருக்கிறது. ஆண்டவன் ரூபத்தை நான் காணவில்லை. ஆனால், கண்ணெதிரே நின்று பேசும் ஒரு மனிதரது குரலைப்போலவே, ஈசனது குரலையும் நான் கேட்கத்தான் கேட்டேன். அதற்கு முந்தி என் மனத்தகத்தே பெரும் போராட்டமாயிருந்தது. திடீரென்று ஆண்டவனது ஆக்ஞை பிறந்தது. அமைதி பெற்றேன். உபவாசத்திற்கு நாளும் நேரமும் குறித்துவிட்டேன். உடனே மகிழ்ச்சி ஏற்பட்டது; உள்ளம் மலர்ந்தது. சந்தேகப் பிரக்ருதிகளைத் திருப்தி செய்ய, வேறெந்த ருசுவும் என்னிடமில்லை. முன்னதாகத் தங்களைப் பக்குவப் படுத்திக்கொள்ளும் எவருந்தான் என்னைப்போலவே ஈசன் குரலைக் கேட்க இயலும்.

"ஒரு பட்டாளம் டாக்டர்களைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு புரிந்த உபவாசத்தை அந்தர்யாமியின் கட்டளைப்படி நடந்தது எனக் கூறலாமா?" என்று ஒரு கேள்வி கேட்கின்றனர். நண்பர்கள் உதவியை ஏற்றதற்கு நான் வருந்தவில்லை. நான் எமனுடன் போராடிக்கொண்டிருந்தேன். எனது பிரதிக்ஞைக்குப் பங்கமில்லாமல் கிடைத்த சகல உதவியையும், ஈஸ்வரன் அருளியதே யென்று மதித்து நான் ஏற்றுக்கொண்டேன்.

முந்திய எந்த உபவாசத்திலும் அடையாத அவ்வளவு ஆனந்தத்தை இவ்வுபவாசத்தில் நான் அடைந்தேன். அந்த ஆனந்தத்தை வர்ணித்துச் சொல்லவே முடியாது. உபவாசம் என்பது ஆண்டவனுடன் இரண்டறக் கலக்க உண்டாகும் ஆன்ம வேட்கையேயாகும். இதில் எவ்வளவு தூரம் நான் வெற்றி பெற்றேன் என்பதை என்னால் சொல்ல முடியாது. ஆனால் அந்த ஐக்கிய பாவத்தை அடைவதற்கு எனக்குள்ள ஆசை, இந்த உபவாசத்தால் பன்மடங்கு வலுத்துவிட்டது.

இந்த உபவாசத்தின் பயனாக, ஹரிஜன சேவை செய்வோரிடமும் தூய்மை அதிகரித்திருக்கிறது. இவ்வுண்மையை எனக்கு வந்திருக்கும் பல கடிதங்கள் காட்டுகின்றன. ஹரிஜன சேவை மத சம்மந்தமான ஓர் இயக்கமே என்பதை அவர்கள் இவ்வுபவாசத்தால் உணர்ந்து கொண்டார்கள். வேறெந்த வழியாலும் அவர்கள் இதை அறியச் செய்திருக்க முடியாது. தற்காலம் வழக்கத்திலிருந்து வரும் தீண்டாமை என்பது ஈசுவர நியதி என்றே லட்சக் கணக்கான ஜனங்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஜனங்களின் இருதயத்தை இளக்கி மனமாறுதலடையச்செய்வதுதான் ஹரிஜன இயக்கத்தின் லட்சியமாகும். மனிதனிடம் மறைந்து கிடக்கும் உன்னதமான நற்குணத்தை வெளிப்படும்படி செய்வதன் மூலமாகத்தான் அந்த லட்சியத்தைப் பூர்த்தி செய்யலாம். அந்தக் காரியம் ஆத்ம பரிசுத்தத்தினால்தான் இயலும். உபவாசம் என்பது புண்பட்ட மனத்திலிருந்து புறப்படும் ஆழ்ந்த பிரார்த்தனையே யாகும். —ஹரிஜன்.

---

(104-ம் பக்கத் தொடர்ச்சி)

நீலகிரியில் வாழும் பழங்குடிகள்—தொதவர், வடுகர், கோத்தர், குறும்பர், இருளர் என்பவர்களாம். இவர்களுள், வடுகர், டிப்பு என்னும் மகம்மதிய அரசன் காலத்தில் மைசூர் நாட்டினின்றும் இங்கே வந்தவர். தொதவர், கோத்தர், குறும்பர், இருளர் ஆகிய இந் நால்வரே நீலகிரியின் பழங்குடிகள் ஆவர்.

தோதவர்: நீலகிரி முழுதும் இவர்களுக்குச் சொந்தமானது. இவர்கள் ஐயாயிரம் அடிக்குக் கீழ் வருவதே இல்லை. ஒத்தகமந்தை யடுத்த இடங்களில் இவர்கள் பயிர் செய்து, பண்டைக் காலத்தில் வாழ்ந்து வந்தனர். இவர்களுக்குத் தொழில் செய்துகொண்டு வாழ்ந்தவர் கோத்தர் என்பர். அவர்கள் வாழ்ந்த இடத்துக்குக் கோத்தகிரி என்னும் பெயர் இன்றும் வழங்குகிறது.

தொதவர்களுக்கு முக்கியமான தொழில் எருமை மேய்த்து, அதைக் காத்து, அதன் பாலைக் கொள்ளுதலாகும். கோத்தர்களின் தொழில், தொதவர்களுக்குப் பறையடித்தல் முதலிய செயல்களாம். தொதவர்களின் மரண காலத்தில் பலியிடும் எருமையைக் கோத்தர் கொண்டுபோய்த் தோலை யுரித்து, மாமிசத்தை எடுத்துக் கொண்டு, அத்தோலை ஒருவாறு பதன் செய்து, தொதவர்களுக்குக் கொடுத்துவிடுவர். தொதவர் கோத்தரைத் தொடுவதில்லை.

குறும்பர் நாடோடிகள் மற்றவர்களோடு சேர்வதில்லை. சிலர் இக் காலத்தே தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்கின்றனர்; மிக்க உழைப்பாளிகள்.

இருள் அடர்ந்த காடுகளில் குடியிருப்பவர் இருளர். அவர்கள்—தொதவர், கோத்தர் இவர்களோடு சேர்வதில்லை. இப்போது சிலர் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்கின்றனர்.

(த. க.)

# குழந்தைகள் பக்கம்

## காந்தி யார்?

உத்தமனாய் இரு. இது ஔவை வாக்கு. பூமண்டலத்திலே 150 கோடி மக்கள்; நம் இந்தியாவிலோ 33 கோடி மனிதர்; எல்லாரிலும் உத்தமன் யார்? மகாத்மா காந்தியே அவரே கலி காலத்தில் கண்கண்ட தெய்வம்; கதி தரும் கடவுள்; கருணை வள்ளல்; சாந்த மூர்த்தி; தெய்வப் பிறவி; அவதார புருஷன்.

அகதிக்கு ஆண்டவன் துணை; ஏழைகளுக்கோ காந்தியே துணை. எளியவர் வருந்தின் காந்தி கதறுவார்; கண்ணீர் விடுவார். அவர்கள் துயரைப் போக்கிய பின்பே புசிப்பார். உயிர் என்றால் எல்லாருக்கும் வெல்லம்; காந்திக்கு அப்படி அன்று. ஏழைகள் சுகம் அடைய, அவர் தம் உயிரையும் கொடுப்பார்.

அவரது கண்ணில் கருணை; பார்வையில் பிரியம் நிரம்பி யிருக்கும்; பேச்சிலே அன்பு சொட்டும்; அவரைப் பார்த்திருந்தால் பசி தீரும்; காத்திருந் தால் கலி நீங்கும்; சொல் கேட்டால் சுகம் பெறலாம்.

பம்பாய் மாகாணத்தில் போர்பந்தர் என்னும் இடம் அவரது ஊர்; அவரது தந்தை பெரிய பணக்காரர்; மந்திரியாக இருந்தவர். காந்தி பாரிஸ்டர் பரீக்ஷைக்குப் படிக்க சீமைக்குப் போனார். அப்போது, மாமிசம் புசிக்காதே; கள் குடிக்காதே; பொய் சொல்லாதே என்று தாயார் சொன்னாள். தாய்சொல்லை அவர் தட்டி நடக்கவில்லை. தாயினும் சிறந்த கோயில் உண்டோ?

பாரிஸ்டர் பட்டம் பெற்றதும், மாதம் ஆயிரம் ஆயிரமாகப் பணம் தேடினார்; பரம சுகத்தில் இருந்தார்; நம்மவரிலே பலர் இங்கே பிழைப்பு இல்லாமல், தென் ஆபிரிக்கா போயுளர்; அங்கே அவர்கள் அதிக கஷ்டம் அடைந்தனர். காந்தி அதை அறிந்தார். உடனே தென் ஆபிரிக்கா போனார். அவர்களது கஷ்டங்களைப் போக்கப் பாடுபட்டார். அதிகாரிகள் பிடித்துச் சிறையில் போட்டனர்; மூன்று முறை அவர் சிறையில் கிடந்தார்; அடிபட்டார்; உதை பட்டார்; எல்லாம் எதற்காக? ஏழைகள் நலம் அடைவதற்காக; தாம் கஷ்டப்பட்டு ஏழைகளின் கண்ணீரைத் துடைத்தார்.

பின்பு, ஏழைகளுக்கு உழைக்க அங்கே ஓர் ஆசிரமம் ஏற்படுத்தினார். பிறருக்கு உதவி புரிவதே அந்த ஆசிரமத்தின் நோக்கம். இன்றும் பலர் அங்கே பரோபகாரம் செய்து வருகின்றனர். அங்குள்ள நம்மவரின் கஷ்டம் தீர்ந்ததும், அவர் இத்தேசம் வந்தார், அல்லும் பகலும் ஏழைகளுக்கு உழைக்க முற்பட்டார்.

பம்பாயிலே ஏழைத் தொழிலாளர் அதிகம். அவர்களுடைய கஷ்டம் கண்டு காந்தி சகிக்கவில்லை; மூன்று நாள் பட்டினி கிடந்தார். ஏழைகளின் துன்பத்தைப் போக்கினார். பின்பு, ஏழைக் குடியானவருக்கு ஊழியம் புரிந்தார். அதில் கஷ்டமும் நஷ்டமும் வந்தும், அவர் கவனிக்கவில்லை. தான் துன்பம் அடையினும் பிறர் சுகப்பட்டால் போதும் என்பதே அவர் கருத்து.

கோபம் என்பது அவரிடம் கிடையாது. பகைவனிடமும் அவர் அன்பு காட்டுவார்; யாரையும் நோகச் செய்யார்; அன்பினால் அனைவரையும் வசம் செய்வார்; தீமை செய்தவனுக்கும் நன்மையே செய்வார். இது கண்டு உலகத்தார் அனைவரும் அவரை ஈசுவர அவதாரம் என்று ஏத்துகின்றனர்; தொழுகின்றனர்; எனவே, கல் நெஞ்சனும் அவரது குணம் கண்டு மனம் கரைவான்; கள்வனும் கை எடுத்துக் கும்பிடுவான்; கரடி, புலி முதலிய துஷ்ட மிருகங்களும் அவரைக்கண்டு அடங்கி நிற்கும்.

நம் தேசத்திலே பலருக்குக் கட்டத் துணி இல்லை. அது கண்டு அவர் மன மிளகினார். சட்டையும் குட்டையும் வேண்டாம் என்றார். முழத் துணியே கட்டிக்கொண்டிருக்கிறார். ஏழைகளுக்கு நன்மை கிடைக்க, ராட்டையில் அவர் நூல் நூற்கிறார்; கதர் ஆடையே கட்டுகிறார்; கருணை வடிவாய் விளங்குகிறார்.

ஒரு சமயம் இங்கே அவரை ஆறு வருஷம் சிறையில் போட்டனர். தண்டனை கொடுத்த அதிகாரியே அவரை மகான் என்று பேசிப் புகழ்ந்தார். ஆங்கில ராஜாங்கமும் அவரிடம் மதிப்பு வைத்தது. காரணம், அவரது அருங்குணமே. எங்கேனும் அவர் போனால், தேர் திருநாள் போல் ஜனங்கள் கூடுவர். அவரைத் தரிசித்து வணங்குவர்.

அவரை எங்கும் கொண்டாடுகின்றனர். கொண்டாடுவதற்கு அடையாளம் என்ன? அவரைப் போல் எல்லாரும் நல்லவராய், உத்தமராய் இருக்கவேண்டும்; அனைவரிடமும் அன்பு காட்டவேண்டும்; யாருக்கும் உதவி புரிய வேண்டும்; அவரைப் பின்பற்றி நடந்து மேலான நிலை பெற வேண்டும். அவரது முழுப் பெயர் மோகனதாஸ்கரம் சந்திர காந்தி அவர் நீடூழி வாழ்க!

# நீலகிரி

நீலகிரி என்பது ஒரு மலைத் தொகுதி. நீலகிரியில் மலைகள் ஒன்றன் மீது ஒன்றாக ஓங்கி வளர்ந்திருக்கின்றன. அதன் மேலிடத்திற்கு 'ஒத்தகமந்த்' என்று பெயர். அது, கடல் மட்டத்துக்கு 7,500 அடி உயரமுள்ளது. தொட்டபெட்டா' பெரிய மலை என்பது அதன் கொடுமுடி. அதன் உயரம் ஏறக்குறைய 8,300 அடியாகும்.

'ஒத்தகமந்த்' என்னும் இடத்தை 'உதகமண்டலம்' என்று பலரும் கூறுவர். உதகமண்டலம் என்றால் தண்ணீருள்ள இடம் என்பது பொருள். அங்கே மிக்க குளிராயிருப்பதனால், அவ்வாறு எண்ணி, உதகமண்டலம் என்று கூறுவாராயினர். உண்மை அஃதல்ல.

ஒத்தகமந்த் என்னுமிடத்தில் வாழும் மிகப் பழமையான குடிகள் தோதவர் என்பவர். அவர்கள் வாழும் ஊருக்கு மந்து மன்று என்று பெயர். ஒவ்வொரு மந்திலும் நாலைந்து வீட்டுக்கு மேலிராது. அப்படிப்பட்ட மந்துகள் அங்கு அநேகம்: ஒத்தக்கல் மந்து, ஒன்றைக்கல் மன்று மஞ்சக்கல், மஞ்சட்கல் மன்று மந்து, தாரநாடு மந்து, கண்ணகி மந்து; இவை போன்ற பெயர்கள் அவ்வூர்களுக்கு அமைந்துள்ளன.

இப்பொழுது கவர்ன்மென்ட் ஆபீஸ் அமைந்துள்ள மலையின்மேல், ஒத்தக்கல்மந்து என்று ஒரு மந்து இருந்தது. சுமார் நூறு யாண்டுகளுக்கு முன் ஸலிவன் என்னும் துரைமகன் (கோயம்புத்தூர் ஜில்லா கலெக்டர்) நீலகிரிக்குச் சென்றபொழுது, அந்த மலையின்மீது போய், அங்கே கருங்கல் கட்டடம் ஒன்றைக் கட்டி முடித்தான். பிறகு கவர்ன்மென்ட் ஆபீசுக்கட்டடங்கள் அங்கே ஏற்பட்டன. அங்கிருந்த ஒத்தக்கல்மந்து என்பதையே 'உதகமந்த்' என்று ஆங்கிலேயர் சொல்லுவாராயினர். 'ஒ' என்பது 'உ' ஆகமாறவே, அதன் பெயரையறியாத இங்கியர் உதக மண்டலம் என ஸம்ஸ்கிருதப் பெயரிட்டுக் கூறுவாராயினர். உதகமண்டலததுக்கும் ஒத்தக்கல் மந்துக்கும் என்ன ஒற்றுமை உண்டு! இஃது, ஒன்றை வேறொன்றாக எண்ணிக்கொண்ட குற்றத்தினால் உண்டானதாகும். இன்றும் அங்குள்ளவர்கள் ஒத்தக்கல் மந்தை 'ஒத்தை' என்றே சுருக்கிக் கூறுவர். அதுவே, ஊட்டி என ஆங்கிலத்தில் வழங்குவதாயிற்று. இன்னும் துரைத்தனத் தோட்டத்துக்கு மேற்புறத்தில் ஒரு மந்து இருக்கிறது. அதற்கு மஞ்சக்கல் மந்து என்று பெயர்.

அங்கில ஆசிரியர்கள் ஒத்தமமந்த் என்பதற்கு வெவ்வேறு காரணங்கள்கூறுவர். அவையெல்லாம் உக்தியே யன்றி உண்மையாகா. ஒத்தக்கல் மந்து என்பதே உண்மை. ரெயில்வே ஸ்டேஷனிலும் 'ஒத்தக மந்து' என்றே பலகையில் எழுதியிருக்கின்றது.

இனி, நீலகிரி என்னும் பெயர் அம்மலைக்கு எப்படி வந்தது என்பதைச் சிறிது ஆராய்வோம்:

மலைக்கும் மலையைச் சார்ந்த இடத்துக்கும் குறிஞ்சி என்று பெயர். நீலகிரி என்பது, அங்கே மிகுதியாயுள்ள குறிஞ்சிச் செடியினால் ஏற்பட்ட பெயராகும். குறிஞ்சிச் செடி சுமார் மூன்றடி உயரமுள்ளது. அதன் மலர் நீலநிறமாக இருக்கும். அச்செடி பன்னிரண்டு வருஷத்துக்கு ஒரு முறை பூவெடுக்கும். தாவர சாஸ்திரிகளும் இதனை ஒப்புக்கொண்டு எழுதியிருக்கின்றனர். அது பூக்குங்காலத்தில் மலை முழுதும் ஒரே நீலநிறமாகத் தோன்றும்; அதனால் இம்மலைக்கு நீலகிரி அல்லது நீலமலை எனப்பெயர் ஏற்பட்டிருக்கிறது. சுமார் மூன்று வருஷத்துக்குமுன் இக் குறிஞ்சி பூத்திருந்ததைக் கண்டோர் அனைவர்க்கும் இவ்வுண்மை விளங்கும். தோதவர்களை வயது கேட்டால், 'நான் பிறந்து குறிஞ்சி ஒருதரம் பூத்தது, இரண்டு தரம் பூத்தது' என்றே கணக்குச் சொல்லுவர்.

[102-ம் பக்கம் பார்க்க]

# நடனம் ஓர் வித்தையாகவும் ஆரோக்கியதிற்கு ஓர் உதவியாகவும் இருப்பது.

நமது 2-வது இதழில் முன் பக்கத்தில் பிரசுரித்த நடன படத்தின் விவரம்.

மிஸ்டர் ஈ. கிருஷ்ணய்யர், அட்வோகேட், ஹைகோர்டு, மதருஸ்.
காரியதரிசி, சென்னை மியூஸிக் அகாடெமி.

மானிடர்களால் அப்பியஸிக்கப்பட்ட எல்லா வித்தைகளுள், வெகு காலத்திற்கு முன்னிருந்தே வழங்கி வந்ததும் சர்வ சாமானியமாயிருப்பதும் நடனமே. சங்கீதத்தைப் போலவே, ஒரு விஷயத்தில் சங்கீதத்திற்கும் மேற்பட்டே சொல்லும்படியான மானிடர்களின் ஆதியான இயற்கையறிவுகளில் இது ஒன்று. எவ்விதமெனில், எல்லா ஜீவராசிகளிலுள்ள அபரிமிதமான உற்சாகத்தையும் சந்தோஷத்தையும் இது நேராக வெளிக்காட்டக் கூடியது. 'சந்தோஷத்தினால் கூத்தாடுகிறான்' என்று வழங்கும் வசனமே இதை விவரித்துச் சொல்லப் போதுமானது. மூலாதாரமானதும் மிக சாதாரணமானதுமான தாளத்திற்கேற்ற நாட்டியம் முதல் அதிக நாஜுக்கான பரத நாட்டியம் வரையில், இந்நாட்டில் நாட்டியத்தின் விருத்தியையும் பூலோகத்திலுள்ள வித்தைகளுக்கு அதனால் உண்டான சகாயத்தையும் பற்றி யோசித்துப் பார்த்தால் இதை ஒன்றும் இழிவாய்ச் சொல்லத் தகுந்ததல்ல. நடனம் என்பது மானிடர்களின் உயர்ந்த மனோவிகாரங்களையும் ரஸஞ்ஞானங்களையும் எடுத்துக் காட்டும் சரியான மார்க்கம் என்பதை, இதைக் குறித்துத் தெரிந்தவர்கள் யாவரும் ஒப்புக் கொள்ளாதிருக்க மாட்டார்கள். வித்தையில் ஒருவித தினுசாகவும், மானிடர்களுடைய, முக்கியமாய் ஸ்திரிகளுடைய ஆரோக்கியத்திற்கும் தேகபலத்திற்கும் அவசியமான ஒரு அம்சமாகியும் இருப்பதால் இந்த நடனத்தின் பலனை நாம் அளவிட முடியாது.

இந்தியாவில் இந்த வித்தையானது தொன்றுதொட்டே வழங்கப்பட்டு வந்தது. பாரம்பரியமாய் நமக்கு கிடைத்த வித்தியா பொக்கிஷங்களுள் இது ஒன்று. இந்த வித்தையைக்கண்டுபிடித்தவர்கள் தேவதைகள் என்றே சொல்லப்படுகிறது. சிவபிரான், சுப்பிரமணிய ஸ்வாமி, நந்திகேஸ்வரர் ஆகிய இவர்கள் நாட்டியத்தின் பூர்வீக ஆசிரியர்களுள் சிலராகும். பரதர் பிரம்மாவினிடமிருந்து இதைக்கற்றுக்கொண்டார். பார்வதி அம்மனும், பாணனுடைய கமளாகிய உஷையும் இதை அப்பியசித்து வந்தார்கள். இந்த வித்தையின் அபிவிருத்தியின் பொருட்டு தேவதைகள், அப்ஸர ஸ்திரிகள் என்று சொல்லப்பட்ட தேவலோக நாட்டியப் பெண்களை காயமாய் வைத்துப் பரிபாலித்து வந்தார்கள். நடராஜருடைய விக்கிரகத்தினின்றே நாம் கிரகித்துக் கொள்ளக்கூடிய அவரது மகத்தான பிரபஞ்ச சம்மந்தமான நடனத்தையும், ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவினுடைய ரஸக்கிரீடை முதலிய நாட்டியங்களையும் அறியாதார் யாரும் இவ்வுலகிலில்லை. முற்காலத்தில் உத்தரா, மாலவிக முதலிய ராஜஸ்திரீகள் அநேகர் நாட்டியத்தை விடாமுயற்சியுடன் அப்பியசித்து, வந்ததாகத் தெரியவருகிறது. இந்து தேச ராஜாக்களின் கொலுக்களில் இது முக்கியமான பீடிகையாகவிருந்தது. கல்யாண சந்தர்ப்பங்களில், தேவையான அம்சங்களுள் இது ஒன்று. கோயில்களில் வெகுகாலமாக பூஜைக்குப் பிறகு, நாட்டியம், சடங்குகளில் ஒரு பாகமாக வழங்கிவருகிறது.

நமது தேசம் அதிக விஸ்தாரமான படியாலும், அதனால் இடபேதங்கள் ஏற்பட்டிருப்பதாலும், நமது இந்து தேச சரித்திர சம்பவங்களை யொட்டி அநேகவித கலைகள் ஒன்றுக்கொன்று முரண்பட்டிருப்பதாலும் இந்த நடனமும் தேசாசாரத்தை அனுசரித்து மாறுபாடு

கள் அடைந்திருக்கிறது. பரிபாஷை மூலமாய் இதை விஸ்தரித்துச் சொல்லாவிடினும் இந்தியாவில் வழங்கும் நாட்டியமானது, தேகத்தினுள்ளிருக்கும் மனோவிகாரங்களையும் உணர்ச்சிகளையும், அதற்கேற்ற தாளத்துடனும் நானாவித நிலைமைகளுடனும், விபரமாய் எடுத்துக் காட்டுவதேயாகுமென்று சொன்னாலே போதுமானது. எந்த விதத்திலும் இது பிரயோஜனப்படக்கூடிய தேகப் பயிற்சியாகும். சாதாரண வியாயாமங்கள் அந்தந்த சதைகளை மட்டும் விருத்தி செய்வனவாயிருக்க, நடனமோ பாதாதிகேசம் வரையில் ஒவ்வொரு பாகத்தையும் மாறுதலடையச் செய்யும். சில நிமிஷ நேரம் நடித்தாலுங்கூட ஒருவன் தேகம் பக்ஷி மாதிரி லேசாகவிருக்கும் உணர்ச்சி, இதில் சுவல்ப அனுபோகம் உள்ளவர்களுக்குக்கூடப் புலப்படும். இதுவுமன்றி கிரமமாய் நாட்டியத்தை அப்பியஸித்து வந்தாலோ ஸ்தூல சரீரத்தில் உண்டாகிய கொழுப்பைக் கரைத்துவிடும். இதில் ஏற்படும்நானாவித நிலைமைகளும், தாளத்துக் கொத்தாற் போல் நடிக்கும்போது உண்டாகும் அசைவுகளும் சேர்ந்து தேகத்திற்கு அழகான சமலக்ஷணத்தையும் கொடுக்க வல்லன. சாதாரணமான இதர வியாயாமங்களைப் போலின்றி, இது முக்கியமாய் ஸ்திரீகளுக்கு முக்கியமானது. அழகாய் இருக்கவேண்டுமென்று இச்சைப்படும் ஸ்திரீகளுக்கு—எந்த ஸ்திரீதான் அழகாக இருக்க இச்சைப்படாள்? முக்கியமாய் நடனமானது உபயோகமுள்ளது. ஏனெனில் அது அவர்கள் தேகத்தின் ஆக்ருதியில், சௌந்திரயமான வளைவுகளை உண்டாக்கக்கூடியது. ஆனதுபற்றி மேனாட்டு ஸ்திரீகள் முக்கியமாய் அமெரிக்கா தேசத்து ஸ்திரீகள், தாளத்திற்கொத்த வியாயாமங்கள் என்று சொல்லப்படும், இந்த நாட்டியத்தை அதிகமாய் அப்பியஸிக்கிறார்கள் என்றால் அதில் ஏதாகிலும் அதிசயம் உண்டோ! அதனால் உண்டாகும் சாமர்த்தியமான அசைவுகள், கைகால்களுக்கு வலுவைத்தந்து, தேகமுழுதிற்கும் விசேஷ சுறுசுறுப்பை உண்டு பண்ணுவதுடன், தேகத்தின் எந்த பாகத்திற்கும் ஒருவித தீங்காகிலும் அனாவச்யமான பிரயாசையாகிலும் நேரிடும்படி செய்யா.

பரத நாட்டியத்தில், கைகால்கள் மட்டுமின்றி, கண்கள் புருவங்கள், உதடுகள், இவை யாவும் இந்த அப்பியாஸத்தில் ஈடுபடுகின்றன. கழுத்து அசைவும் இதில் உண்டு. முதலில் அது கண்ணுக்குப் புலப்படாவிடினும், வெகு நாள் கஷ்டப்பட்டு. அப்பியஸித்து வந்தால் அது ஏற்படும். அதனால் கழுத்தின் சதைகளை சாமர்த்தியமாய் வசப்படுத்த முடியும். இதனால் அழகும் லாவண்ணியமும் வாய்ப்பதும் தவிர, தேகத்தின் அந்த பாகத்திற்கு இதுகேவலமான வியாயாமமன்று. ஒரு ஒப்பற்ற நாட்டியப் பெண்ணின் ரூபலாவண்ணியங்களைப் பற்றி கிருந்தகர்த்தாக்களும் கவிராயர்களும் விஸ்தாரமாக எழுதியிருக்கிறார்கள். ஒருவர் நாட்டிய மாடப்புதுமுன்னரே இவ்வித லக்ஷணங்கள் பொருந்தியுள்ளவர்களாக இருக்கவேண்டுமென்றிருக்க நாட்டியம் கற்றுக்கொண்டு அப்பியஸித்த பிறகு இவ்வித லக்ஷணங்கள் உண்டாகும் என்று ஏன் சொல்லக்கூடாது?

நாட்டியம் தேகத்திற்கு ஒருவித குதூஹலத்தை உண்டு பண்ணுகிறதும் தவிர, நாட்டியம் செய்வோர்க்கும் நாட்டியத்தைப் பார்ப்போர்க்கும் இது உண்டாக்கும் சந்தோஷமானது இவ்வளவவ்வளவில்லை. நாட்டியம் ஆடும் போது, அதைப் பார்த்து ஆனந்திக்காதவர்கள் ஒருவருமில்லை. இதன் மகிமை பார்ப்போர்க்கும் தொத்திக்கொண்டு, தங்களுக்குத் தெரியாமலே நாட்டியம் செய்வோரின் அசைவுக்கொத்தபடி தங்கள் தலைகளை ஆட்டிக்கொண்டு சலனமற்றிராதவர்கள் ஒருவருமில்லை. தாளத்திற் கேற்ற அசைவுகள் நரம்புகளுக்கு சுகத்தைக்கொடுக்கும், சரியான நரம்புகளைக் காட்டிலும் தேகாரோக்கியத்திற்கு முக்கியமானது என்ன வேண்டும்?

இவ்வித்தையின் குணம் இத்தகையது. இதன் உபயோகத்தை செவ்வையாய் அறிந்திருப்பதுபற்றி வெகுகாலமாக லௌகிக,



வைதிக வாழ்வில் இது பிரியாத அம்சமாக ஏற்பட்டு, ராஜாக்களும் கனவான்களுமன்றி, சாதாரண ஜனங்கள் கூட இதைப் பின்பற்றி வந்தார்கள். தெய்வீகப்பிறப்பும் ராஜாங்க ஆதரவும் கீர்த்திபெற்ற வளப்பும் இதற்கிருக்க சிலகாலமாக, நமது தேசத்தின் இந்த பாகத்தில் இதற்கு கௌரவக்குறைவு ஏற்பட்டதைப் பற்றி நாம் விசனிக்கிறோம். ராஜாங்க ஆதரவை எடுபட்டுப்போனதும், நாட்டியத்தின் மேல் ஒருவித துரபிமானமும் தப்பு அபிப்பிராயங்களும் ஏற்பட்டதும், இந்த வித்தியா அபிவிருத்தியில் அதற்கு நேரிட்ட கெடுதலான மாறுதல்களும் ஒன்று சேர்ந்து அதை இப்போதுள்ள ஹீன ஸ்திதிக்குகொண்டு வந்து விட்டிருக்கின்றன. எல்லா ஸ்திரீ புருஷர்களுக்கும் இது பொதுவான வித்தையாயிராமல் கௌரதையான ஜனசமூகத்தினின்றும் விலக்கப்பட்ட தாஸீ ஜனங்கள் என்று சொல்லப்பட்ட சில வருப்பாரிடம் இது தற்காலம் சிக்கிக்கொண்டிருக்கிறது. ஆனால் இது வித்தையினுடைய பிசகல்ல. யார் மூல்யமாய் இந்த வித்தை இப்போது பரிமளிக்கிறதோ, அவர்களால் இது கஷ்டப்படுகிறது. கேள்வி முறை இல்லாமல் செழிப்பாய் வளர வளர, இதற்கு சில தோஷங்கள் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் இவற்றைத் தவிர்ப்பது சுலபம். இருந்தபோதிலும், மேனாட்டார் ஆடும் நாட்டியங்களில் காணப்படும் சில காமமூட்டும் நடிப்பும் உடையும் போல் அவ்வளவு அசப்பியமானவை நமது நாட்டியத்தில் ஒன்றுமில்லை. இந்திய நாட்டியத்தைக் கண்டனம் செய்யும் சீர்திருத்தக்காரர்கள் அநேகர், உயர்ந்த பதவியிலுள்ள உத்தியோகஸ்தர்களால் ஏற்படுத்தப்பட்ட இத்தகைய நாட்டியத்தைப் பார்க்கப் போகவில்லையா? நல் எண்ணத்துடன் கூடியிருக்கும் நமது சீர்திருத்தக்காரர்கள் மட்டும் இதில் அவர்களுக்குள்ள அக்கறையுடன் கொஞ்சம் பொறுமையும் வகித்திருந்து மனிதர்களுக்கும் விஷயங்களுக்குமுள்ள பேதாபேதத்தை பகுத்தறியும் பக்ஷத்தில், நம்முன்னோரிடமிருந்து நமக்குக் கிடைத்திருக்கும் இந்த வித்தையை, அதன் நிஜமான பிரயோஜனத்துடனும் பிரதாபத்துடனும் நாம் பாதுகாத்துக் கொள்ளலாம்.

நமது தேசத்தில் சாதாரண சதிர் கச்சேரியில் ஆடப்படும் சந்தேகமான பரதநாட்டியம் தவிர, இன்னும் சில சாதாரண நடனங்களைக் குறித்தும் விசாரிப்போம். நாட்டியத்தின் உயர்ந்த வகுப்பிலும் கூட இரண்டு வகைகள் உண்டு. ஒன்று பரதநாட்டியம். இது விஸ்தாரமான அபிநயத்துடன் கூடி, நாஜூக்கான 'லாஸ்யா' என்று சொல்லப்படும் வகுப்பை சேர்ந்த நாட்டியம். மற்றொன்று தாண்டவ நாட்டியம்; முன்சொன்னதைக் காட்டிலும் இது வலுவானது. (நடராஜருடைய நாட்டியம் தாண்டவ வகுப்பைச் சேர்ந்தது.)

இவற்றைத் தவிர சாதாரண ஜனங்கள் ஆடும் சில நடனவகைகளைச் சொல்லலாம். அதாவது கோலாட்டம், கும்மி முதலியன. மலையாளத்தில் கதைகளி என்று சொல்லப்பட்ட ஒருவித சிறந்த நாட்டியம் உண்டு. இது நாடகம் மாதிரியாகவே ஆடப்படும்.

இவ்வளவு சொல்லியும், ஒவ்வொரு மனிதனுக்கும் ஸ்திரீக்கும் அழகான தேகத்தையும் காம்பீரமான ரூபத்தையும் அடைய வேண்டுமென்று அவா இருக்கிறது. ரூபம் வேண்டுமென்றால் பலம், ஆரோக்கியம், சமானமான அளவு: அந்தம், உற்சாகம் இவையாவும் வேண்டும். இக்குணங்கள் அடையவேண்டின், நாட்டியத்தைப் போன்ற வியாயாமம் தவிர ஏதாகிலும் உண்டா? இதன் பலனை யோசிக்கின், ஏன் ஒவ்வொரு பள்ளிக் கூடத்திலும் இதன் சில பாகங்களையாவது பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுக்கக் கூடாது என்பதற்கு யாது காரணமும் காணோம். சங்கீதத்தை பாட நிர்ணயத்தில் சேர்க்கப் பட்டிருக்கும் போது, நாட்டியமும் தற்போது பெண்களுக்காவது அதைப்போல் பாட நிர்ணயத்தில் சேர்க்கப்படலாம். மேனாட்டு தேசங்களிலுமன்றி கீழ் நாட்டில் ஜப்பான், இந்து சைனீஸ் தீபகல்பம் இவற்றில் நாட்டியத்

112-ம் பக்கம் பார்க்க

# பெண்ணை வளர்க்கும் விதம்

(ஆசாரிய வ. வே. ஸு. அய்யர்)

வெள்ளி வீதியும், ஒளவையும், அள்ளூர் நன் முல்லையும் ஒக்கூர் மாசாத்தியம் இன்னோ ரன்னகவி குலதிலகங்களும் விளங்கிய தமிழ் நாட்டில் மாதருக்குக் கல்வி பயிற்ற வேண்டியது அவசியம் என்று வற்புறுத்தும் நாளும் வந்தது விந்தையினும் விந்தை. ஆனால் சென்ற சில வருஷங்களாக இவ்வவசியம் அறிவுடைய எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு விட்டது. இருப்பினும் நமது பெண் மக்களுக்கு எவ்விதமான கல்வி தரவேண்டும் என்கிற விஷயத்தை ஆழ்ந்து யோசித்து நிச்சயிக்க யாரும் வந்ததாகத் தெரியவில்லை. ‘அரிவரி’ வகுப்பு முதல் பி. ஏ., வகுப்பு முடியும் வரையிலும் ஆண்மக்களுக்கு வைத்திருக்கும் பாடங்களையே பெண் மக்களுக்கும் வைத்துத்தான் ஆங்கிலப் பாடசாலைகள் போதித்து வருகின்றன.

நமது மாதரின் வாழ்க்கை நோக்கம்தான் என்ன? அவர்கள் குமாஸ்தாக்களாக இருந்துகொண்டு சப்பாதிப்பதா? அல்லது மாஜிஸ்டிரேட், தாசில் முதலிய உத்தியோகங்கள் பார்த்து ராஜ்ஜிய நிர்வாகத்தை நடத்துவதா? அல்லது யந்திர சாலைகளிலும் ஆலைகளிலும் புகுந்து தச்சர் செய்யும் வேலைகள் செய்து அவைகளை நடத்துவதா? இவை ஒன்றும் அல்ல, என்று அநேகமாய் எல்லோரும் ஒப்புக்கொள்ளுவார்கள். மற்றும் என்னதான் அவர்கள் வாழ்க்கையின் லட்சியம்? எனக்குத் தோன்றியமட்டில் இவ்விலட்சியத்தை இரண்டாகக் கூறலாம். ஒன்று பொது லட்சியம், மற்றது ஆத்ம லட்சியம் அல்லது தனி லட்சியம்.

எல்லா மாதருக்கும் பொதுவான நோக்கம் இவ்வாறாக இருத்தல் வேண்டும். அதாவது தாங்கள் பிறந்த குடும்பத்துக்கும் புகுந்த குடும்பத்துக்கும் தாயகமாகவும் ஆதாரமாகவும் இருக்க வேண்டும். குடும்பத்தின் நடப்பும், அதன் நல்ல பெயரும், அதன் மங்களமும் ஆனந்தமும் ஸ்திரீகளைப் பொறுத்தது. மனிதன் வெயிலில் அலைந்து திரிந்து முரட்டு வேலைகள் செய்து மற்றொருவனுடைய பொறாமைக்கும் பகைக்கும் உள்ளாகிக் குடும்பம் நடத்துவதற்கு இன்றியமையாத தனத்தைச் சம்பாதித்து வருகிறான். ஆனால் வீட்டினுள் புகுந்ததும் அவனுடைய கஷ்டங்களையும் விசாரங்களையும் போக்கி, அன்பினால் அவனுடைய இருதயத்திற்கு உயிர்கொடுத்து விவகார உலகத்தில் நேரும் இடையூறுகளை, வெல்லும்படியான ஆற்றலைத் தருவது பெண் மணிகளின் காரியமாகும். இப்படிக் குறையாயிருக்கும் ஆண் மக்களின் வாழ்க்கையை நிரப்பிக் குடும்பத்தை முழுதாக்கல் ஸ்திரீகளின் பொது தர்மம். அவர்களுக்கு இப்போது தர்மத்தோடு தனி தர்மம் ஒன்று உண்டு என்று மேலே சொன்னோம். அதாவது அவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனி ஜீவனாதலால், தற்பயிற்சியில் ஆரம்பித்துப் பூரணத்துவம் பெறும் வரையில் உழைத்து வருவதே. இவ்வெண்ணங்களை ஸ்திரீகள் கொள்வதற்கென சிறு வயதுப் பெண்களை எவ்வாறு பழக்கினால் பயனடையலாம்.

முதலில் நமது பெண் திடகாத்திரவதியாக இருக்கவேண்டும். ஏழு வயது வரையிலுமாவது அவள் யதேச்சையாக விளையாட வேண்டும். பாண்டி விளையாடுதல், மத்து இழுத்தல், கோலாட்டம் போடுதல், முதலிய ஆட்டங்களால் அவளுடைய அவயவங்கள் உறுதிப்படும். சரீரத்தில் ஓர் எழிலும் கைகால்களுக்கு லாகவமும் பிறக்கும். தற்காலம் சிறு வயதிலேயே நல்ல காற்றும் விஸ்தாரமான இடமுமில்லாத பள்ளிக்கூடங்களில், அடைக்கப்பட்டுக் கூன் விழுந்துபோய், கைகால்களில் பலமற்று, கண்களில் தெளிவற்று ஜீவச் சவங்களைப் போலாகிவிடும் பரிதாபகரமான குழந்தைகளைப்போலில்லாமல், அவள் காட்டில் வளர்ந்த மான் குட்டிபோல் லாவண்ணியமாயும் ஜீவ உற்சாகம் நிரம்பிய அவயவங்களுள்ளவளாயும் விளங்குவாள்.

பிரகிருதியின் அழகுகளை அவளை வளர்ப்போர் அவளுக்குக்காட்டி அவளுக்குச் சௌந்தர்யப் பிரக்ஞையும் உதார சித்தமும், உண்டாக்குவார்கள். திறந்த வெளியில் அறியக் கூடியவைகளை யெல்லாம் அவளே கண்ணால் பார்த்தும் காதால் கேட்டும் மற்றப் புலன்களால் உய்த்து உணர்ந்தும் அறிந்து கொள்ளும்படி செய்வார்கள். உதாரணமாக, திசைகள், சூரிய சந்திர நக்ஷத்திரங்களின் கதி; செடி மரங்களின் குணங்களும் வளர்ச்சியும், மிருகங்கள் பக்ஷிகளின் தீனி, இயற்கை ஒளி முதலியன; மழை, காற்று, நதி, கடல் ஆகியவைகளைப் பற்றிய ஞானத்தை அவளுக்கு மிக எளிதாயும் இனிதாயும் போதித்து விடலாகும். இனி இவற்றோடு நல்ல கீர்த்தனங்களைச் சொல்லிக் கொடுத்தலோடு அவளுடைய பிரதம சிக்ஷையை நிறுத்திக் கொள்ளலாம்.

இதன் பிறகு, அல்லது இதன் இடையிலேயே விளையாட்டுப் போக்காக அவளுக்கு அக்ஷராப்பியாசம் செய்விக்கலாகும். ஏழு வயது வரையில் நாம் சொல்லிய வழியில் வளர்க்கப்பட்ட குழந்தையானவள் அதி சீக்கிரத்தில் எழுதவும் படிக்கவும் கணக்குப் போடவும் கற்றுக்கொண்டு விடுவாள். அக்ஷராப்பியாசம் நடக்கும் காலத்திலேயே நமது போதகர் குழந்தைக்கு ராமாயண பாரதக் கதைகளையும், இலியஸ், ஒடிஸ்ஸீ முதலிய மேனாட்டுக் காவியங்களின் கதைகளையும், சுவைபடச் சொல்லியும் முக்கியமான கட்டங்களில் கம்பன் முதலிய கவிஞர் செய்துள்ள செய்யுள்களை மனதிற்படும்படி பாடியும் அவளுடைய அறிவையும் உள்ளத்தையும் விசாலப் படுத்துவார்கள்.

வயது ஆக ஆக, நவீன சாஸ்திரங்களும், தேச சரித்திரமும், பூகோளமும் அவளுக்குப் போதிக்கப்பட வேண்டும். விசேஷமான சாஸ்திர அபிருசி இருந்தாலொழிய நமது பெண்ணுக்கு அச்சாஸ்திரங்களை விரிவுபடக் கற்பிக்க வேண்டுவதில்லை. அவற்றின் மூல சத்தியங்கள் அவளுக்குத் தெரிந்தால் போதும். ஆனால் இதற்கு மாறாக, சரித்திரங்களையும் காவியங்களையும் படிக்கும்போது அவற்றில் நடந்ததாக வரும் சம்பவங்களை நேரில் பார்ப்பதுபோலச் சித்திரப் படுத்திக்கொண்டு, அவ்வச் சம்பவங்களுக் கேற்ற சந்தோஷம், வெறுப்பு, கோபம், வியப்பு ஆதரவு முதலிய உணர்ச்சிகளோடே அவைகளைப் படிக்க வேண்டும். அப்பொழுதுதான் உலகத்தின் பேரனுபவங்களெல்லாம் அவளுடைய சொந்த அனுபவங்களாகமாறி, அவளுடைய வாழ்க்கையைப் புகழ்பெற நடாத்துவதற்கும், அவளுடைய குழந்தைகளுக்கு வீரிய உணர்ச்சியும் தரும உணர்ச்சியும் புகட்டுவதற்கும் சாதனமாக ஆகும். ஆகையால் சரித்திரங்களையும் காவியங்களையும் சுவையோடும் உணர்ச்சியோடும் ஆவலோடும் நமது கன்னிகை படிப்பாள். ஆனால் ஆபாசமான கதைகளும் “நாவல்”களும் அவள் கையில் போகாமலிருக்கும்படி முதலில் பார்த்துக்கொள்ள வேண்டியது அவசியமாகும். பிறகு அவளுடைய பயிற்சியும் ரஸஞானமுமே அவளை அவ்விதமான புத்தகங்களைத் தீண்டாமற் செய்துவிடும்.

நல்ல சித்திரப்படங்களையும் சிலைகளையும் அவளுக்குக் காட்டியும் கம்பீரமான ஆலயங்களுக்கும் மசூதிகளுக்கும் அவளை அழைத்துப் போயும் நமது போதகர் அவளுடைய ரஸ உணர்ச்சியை விரிவு படுத்துவர். தீவிர ஹார்மோனியம், பியானோக்கள் நீங்கலாக ஏதாவது ஒரு வாத்தியத்தையும் பயிலுவித்து அவளுக்குக் கானமும் சொல்லித் தருவர். சித்திரம் எழுதுவதில் ருசி இருந்தால் அந்தக் கலையையும் பயிலுவிப்பர். ஆனால் எல்லாக் கலைகளும் ஒரு பெண்ணுக்கு முற்றிலும் வாராதாகையால் அவளுக்கு எதில் சுவை அதிகம் என்பதை உணர்ந்து, அதை அதிகமாகப் பயிலுவித்தும்

112-ம் பக்கம் பார்க்க

# ஆசிரியர் பகுதி

## ஆசிரியரும் ஒரு தொழிலாளியே!

(ஸ்ரீமான். கீ. பி. சேஷாத்திரி அய்யங்கார்.)

### பிள்ளைகள் படிப்பில் வெறுப்படைவதற்கு உபாத்தியாயர் தான் காரணம்.

உபாத்திமைத் தொழிலில் கீர்த்தி பெற வேண்டுமென்ற நன்னோக்கங் கொண்ட உபாத்தியாயர் தம் வசம் ஒப்புவிக்கப் பட்டிருக்கும் பிள்ளைகளின் விருத்தியைப் பற்றி சதா சர்வ காலமும் கவனமேற் கொண்டவரா யிருத்தலவசியம். சிற்சில வேளைகளில் மாணவர்களின் அபிவிருத்தியைக் கோரும் பேரவாவினால் ஆசிரியர் அன்புக்கு விரோதமான ஒரு மார்க்கத்தைக் கையாள வேண்டியிருக்கும். ஒரு சமயத்தில் ஒரு சமஸ்கிருத பண்டிதர் தம்மிடம் வடமொழி பயிலும் மாணவர்களைப் பிரம்புகொண்டு மிரட்டியும் ஒவ்வோர் சமயத்தில் அதைப் பிரயோகித்தும் வந்தார். அப்பண்டிதர் மிகவும் விற்பன்னர். யாவராலும் புகழப்பட்டவர் தாம் பிள்ளைகளைப் பயமுறுத்தி வந்தமையால் அவ்வூரிலுள்ள சிறுவர்கள் சமஸ்கிருதம் கற்றுக் கொள்ளப் பின்வாங்கத் தலைப்பட்டனர். அதைக்கண்டு அவ்வயோதிக உபாத்தியாயர் தமதெண்ணம் நிறைவேறியதைக் கண்டு உவகை கொண்டார். அப்படிப்பட்டவரை நல்லவர் எனக் கூறவோ; வேண்டாவோ? உண்மையில் அவரைப் புத்தியற்றவரெனக் கூறலாகும்.

சமஸ்கிருத பாஷையைக் கற்றுக் கொள்வதனால் எத்தனைய அனுகூலமும் சந்துஷ்டியுமுண்டானாலும் அப்பாஷையைச் சிறுவர்களின் மனதில் பலவந்தமாக நுழையச் செய்வோமானால் அப்பலவந்தத்தைச் சிறுவர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். அதை எதிர்க்கவும் தலைப்பட்டு விடுவார்கள். அவ்வெறுப்பானது அவர்களது ஆயுளில் அநேக வருஷகாலம் வரையிலும் ஆழ்ந்து மனதில் பதிந்து விடுகிறது. இதேமாதிரியேதான் ஒவ்வோர் கல்வியிலும் வெறுப்புண்டாகி வருகின்றது.

சாதாரண குழந்தைக்கு இயற்கையிலேயே ஆச்சரியப்படுங் குணம் அதிகமாகக் குடிகொண்டிருக்கிறது. விஷயங்களைத் தெரிந்து கொள்ளச் சிறுவர்களுக்கு இருக்கும் ஆர்வத்தைப்போல பிரபஞ்சத்தில் வேறு எந்த ஜீவனுக்கும் கிடையாது. நமது பாடசாலைகளில் அந்தச் சுவபாவமான அறியும் ஆற்றல் தணிக்கப்படுகின்றது. பிள்ளைகள் தெரிந்து கொள்ள இஷ்டப்படாத விஷயங்களைப்பற்றி உபாத்தியாயர் கூறவேண்டியிருக்கிறது. இதனால் பிள்ளைகளின் மனது ஒரு பக்கம் செல்லவும் ; உபாத்தியாயர் அவர்களது கவனத்தைத் தம் பக்கமிழுக்க முயல்வது மற்றொரு பக்கமுமாக அவர்களின் மனதில் இம்மாதிரியான குழப்பமுண்டாகிறது. உபாத்தியாயர் மாத்திரம் அறிவும் ஆற்றலும் உள்ளவரானால் குழந்தைகளின் மனோ தத்துவத்தைப் பற்றியும் அதைத் திருப்பும் வகையையுந் தெரிந்து தாம் சொல்லும் விஷயங்களை அவர்கள் மனதில் கொள்ளச் செய்வார். ஒவ்வொரு சிறுவனும் விளையாட்டை அதிகமாக விரும்புகிறான். பிரம்ம ஞான கல்வி இலாகா காரியஸ்தராயிருந்த எர்னஸ் ஒட் என்பவர் சில வீரச் செய்கைகளை ஒரு தரமோ அல்லது இரண்டு தரமோ செய்து காண்பித்தார்கள். அவைகளைச்



செய்யும் விதத்தையும் கூறினார்கள். முதலில் தங்களால் செய்ய முடியாதென்று எண்ணினவர்கள், பின்பு, யாவரும் ஆச்சரியப்படும் விதமாக அச்செய்கைகளைத் தாங்களே செய்து காட்டினர். கவனத்தைக் கொஞ்ச நேரம் ஒரு வழிப்படுத்தும் பயிற்சியில் பிள்ளைகளைப் பழக்குவித்தால் அவர்கள் பிற்கால வாழ்க்கையில் மனதை யடக்கவும் தானடங்குந்தன்மையை அடையவும் வெகுசுலபமாயிருக்கும். ஆகவே, உபாத்தியாயர் மாணவர்களைச் சினேகம் கொள்ளும் பக்ஷத்தில் அவர்களின் நன்மைகளைக் கொண்டு அவர்களை மென்மேலும் அறிவிலும் ஆற்றலிலும் ஆசாரத்திலும் விருத்தி யடையச் செய்யலாம்.

ஒரே சமயத்தில் எல்லாப் பிள்ளைகளுடைய கவனத்தையும் தம்பக்கமிழுப்பது மிகவும் கஷ்ட சாத்தியமானது தான். உபாத்தியாயர் மாத்திரம் சூக்ஷ்ம திருஷ்டியும், அவதானமும் அனுதாபமும் உள்ளவராகயிருந்தாலொழிய தற்காலத்திய முறைப் பிரகாரம் போதிக்குந் தொழில் நரம்பு வேதனையை உண்டாக்கத் தக்கது. பிள்ளைகளின் மனதில் விஷயங்களைப் பதியவைக்க உபாத்தியாயர் பலவந்தப்படுத்தாமலிருப்பின் அவரது வேலை வெகு எளிதாகிவிடும். சூரியனது பிரகாசத்தைக் கண்டதும் புஷ்பங்கள் மலர்வதைப்போல பிள்ளைகளின் மனதைத் தாம் விகஸிக்கச் செய்வோர் என்ற எண்ணத்தைப் பிள்ளைகள் தெரிந்து கொள்ளா வண்ணம் அவர் மறைக்க வேண்டும்.

புளியங் கொட்டையிலிருந்து மதுரமான மாங்கனியையும், காட்டாமணக்குச் செடியிலிருந்து பரிமளமுள்ள ரோஜாப் புஷ்பத்தையும் ஒருவராலும் உண்டாக்க முடியாது. ஆனால் அறிவும் திறமையுமுள்ள தோட்டக்காரன் தன் புஷ்பங்களை மிகவும் சுந்தரமும், சுகந்தமும், செழுமையு முள்ளவைகளாகவும், நேராக ஓங்கி வளரவும், தன் கைப்பாட்டினாலும், கவனத்தினாலும் உண்டாக்க வல்லவன்.

### கட்டிட சிற்பி.

இவ்வுலகினில் மிகவும் அந்தமும் விந்தையுமான உருவங்களை உண்டாக்க வல்லவர்கள் மூவர் தான் என்று சொல்லலாம். அம் மூவரில் கட்டிடங்களை நிர்மாணஞ் செய்யும் சக்தி பெற்றவன் முதலானவன். அவன் தான் கட்டி முடிக்கத் தொடங்கிய கட்டிடம் பூர்த்தியாகும் வரையில் தனக்கு வேண்டிய செங்கல்களையும் கருங்கற்களையும், மரச் சாமான்களையும் மற்றவைகளையும் சேர்த்து வைத்துக்கொண்டு மனதில் கற்பித்து நிர்மாணஞ் செய்த கட்டிடம் நிலத்தில் அழகியதோர் அருமையான மாளிகையாக அமைந்து முடியும் வரை ஒவ்வொன்றாகச் சேர்த்துக் கட்டி முடிக்கின்றான். அவன் தான் கட்டிட சிற்பி.

### கற் சிற்பி.

கரடுமுரடான பெரிய கற்பாறையை எடுத்து தன் மனதில் எண்ணியபடியே எதிரில் நிற்கும் வரையில் செதுக்கி அவ்வுருவத்தை வெளியில் யாவரும் கண்டு உவக்கச் செய்யும் கற்சிற்பியே இரண்டாவதானவன். தோட்டக்காரன் சமமாயிராததும் கரடுமுரடானதுமான, உலோக வகையிற் சேராத மேன்மையான தாவரவர்க்கங்களில் உழைத்து அபிவிருத்தியடையும் தோட்டக்காரனே மூன்றாவதாவான். அவன் தன் தோட்டத்தில் ‘சிறு மீன் சினையினும்’ நுட்பமாகிய விதைகளை நடுகின்றான். அந்தச் சின்னஞ் சிறிய விதைக்குள் மனிதனின் மனதினால் சிந்திக்க ஒண்ணாததும், அறிவுக்கு எட்டாததும், கைத் திறத்தினால் முடிக்கொணாததுமான தனிப் பெரும் ஒரு அகண்ட உருவம் அடைந்துள்ளது. அவன் அப்படிப்பட்ட விதையைப் போஷித்துக் கண்ணை இமை காப்பதே போல் காக்கின்றான். மணம் கமழும் மண்ணை அதற்கு அளிக்கின்றான். அப்போதைக் கப்போது அதற்குத் தீம்புனலைப் பாய்ச்சுகின்றான். உடனே நிலத்திலிருந்து அது கிளம்பித் தன்னுடைய அழகுக் கேற்ப அற்புதமாய் விளங்கி மனிதனது சாகசத்தினால் அவ்விதம் செய்ய முடியும் என்பதை உலகத்தாருக்கு அறிவித்துத் தன் போஷகனுக்குப் பேரும் புகழை அளிக்கின்றது. கொஞ்ச காலம் கழிந்த பின்

னர் அச் சின்னஞ் சிறிய செடி முளைத்து, இலை வெடித்துக் கிளைத்து கப்பும் கிளையுமாகித் துளிர்த்து அரும்புவிட்டு மலர்ந்து காய்த்துக் கனிந்து அதற்கேற்ற விதையைத் தாங்குகின்றது. முதலில் எதினின்றும் கிளம்பியதோ அதையே கடைசியில் அடைகின்றது என்பதையும் நன்மை யென்பது எதுவோ அது மேன் மேலும் சிறந்து உலகமெல்லாம் அதிகமாகிப் பரவும் என்பதையும் அது வெளியிடுகின்றது.

### சிறு குழந்தைகள் புஷ்பங்களுக்குச் சமானம்.

ஆசிரியர் சிறு குழந்தைகளைத் தம் ஆதரணையில் வைத்துக் கொள்ளும்போது மிகவும் நுட்பமான புஷ்பங்களுடன் கைப்பழக்கங் கொண்டவராகின்றார். அழகும் மேன்மையும் பொருந்தி நன் மணங் கமழும் செல்வி ரோஜா மலரைப் பெற எண்ணுகின்ற நீங்கள், அவ்விரோஜாச் செடியினில் திகழும் அரும் பொன்றை அவசரமாகப்பறித்து நீவிர் உம் மனதிற் கிசைந்தவாறு இதழ்களை உமது பலத்தைக்கொண்டு மலர்த்தி புஷ்ப வடிவத்தைப் பெற ஒரு போதும் விருப்பங் கொள்ள மாட்டீர்களன்றோ? அவ்விதம் செய்வதைவிட்டு நீங்கள் அவ்வரும்பை இயற்கையாக மலர் வடிவமடைய விட்டு விடுவீர்கள். அந்த அழகும், மணமும் ஒருங்கமைந்த ரோஜா மலரின் சுற்றுப் புறம் கண்ணுக்கினிமையாயிருக்கும் பக்ஷத்தில், நீங்கள் அதை அழகிற் சிறந்து விளங்கச் செய்வதைவிட அது தானாகவே பன் மடங்கு அதிக சுந்தரத்துடன் விளங்கத் தடையே இல்லை. இத்துடன் உங்களது வேலை ஒழிந்தபாடில்லை. அம் மலரை வெகு கவலையுடன் பாதுகாக்க வேண்டும்.

---

### 109-ம் பக்கத் தொடர்ச்சி

மற்றவற்றை விட்டோ அல்லது சாமானியமாய்ப் பயிலுவித்தோ வளர்க்கவேண்டும்.

நமது ஆசாரங்களும் தெய்வ சக்தியும் அவளுக்கு இயல்பாகவே வரும்படி செய்யவேண்டும். நமது பெண் மக்களுக்கு சோபை தருவதும் நம் நாட்டுக்குக் கடைசியாக நின்றிருக்கிற கௌரவத்துக்குக் காரணமாக நிற்பதும் நமது பெண்மணிகளுடைய சீலமும் கற்புமே. ஆகையால் அவற்றின் பிராதான்யத்தை அவள் உணரும்படியும் மகரிஷிகளும் சதிமணிகளும் அலங்கரித்த நமதுநாட்டின் புகழும், அவளுடைய பெற்றோர் புகழும், கணவன் புகழும், தன் ஒருத்தியின் சீலத்தைப் பொறுத்திருக்கிறது என்று அவள் நம்பும்படியும், அந்நம்பிக்கைக் கேற்றபடி நடக்கவேண்டும் என்கிற உறுதி அவளுக்குப் பிறக்கும்படியும் செய்வது நமது போதனு முறையின் தீர்மானமான முத்தாய்ப்பாகும்.

இந்த முறையை இயன்ற மட்டில் அனுசரித்தால் நமது குடும்பங்களில் ஒற்றுமையும் அழகும் நாட்டில் சோபையும் ஏற்படும் என்று நினைக்கிறோம்.

---

### 107-ம் பக்கத் தொடர்ச்சி

திற்கு ஒரு வித மேம்பாடு கொடுத்திருக்க இந்தியாவில் மட்டும் நாம் ஏன் அம்மாதிரி செய்யக்கூடாது? இக்காலத்தில் சங்கீதம் முதலிய வித்தைகளை நாம் புதிதாக முன்னுக்குக் கொண்டுவர எத்தனித்து, சங்கீத மஹா நாடுகளும், வித்வத் ஸபையும் ஏற்பட்டிருக்க, சங்கீதத்தினின்றும் இணைபிரிக்க முடியாத நாட்டியத்தை மட்டும் சட்டை செய்யாமல் இருப்பது தகுதியல்ல. இதை இப்போதிருக்கும் மறப்பினின்றும் கிளப்பி அதை உயிர்ப்பித்து முன்னுக்குக் கொண்டுவரும் படியான ஏற்பாடுகள் செய்வது வித்தியாபிவிருத்தியில் ஈடுபட்டவர்களின் கடமையாகும். நாம் முழு நம்பிக்கையுடன், நம்முன்னோர்கள் அடைந்த பிரதாபத்தையும் உன்னி, இந்த நாட்டிய வித்தையை அதன் பூர்விக பதவிக்குக் கொண்டு வருவோமாக.

# உ த ய கு மா ர ன்

(வஞ்சித்தாரை தெய்வம் தண்டிக்கும்)

## ஓர் இனிய தமிழ் நாடகம்

களம் 1.

அங்கம் 1.

கலையாசிரியர் வீடு

நல்லாதனர்:—அப்பா! சீவோதையா, உன்னை உன் தந்தையார் எட்டு வயதில் என்னிடம் கலைபயிலுமாறு விடுத்தனர். இப்போதைக்கு உனக்கு வயது பதினெட்டு பூரணமாயது. நான் உனக்கு கல்வி யறிவுறுத்தியதோடு, வில் வித்தை யானையேற்றம், குதிரையேற்றம் முதலிய வெல்லாவற்றையும் உனக்கு முற்றும் அறிவித்தேன். நீயும் ஏதும் குறைவற நன் குணர்ந்தாய். இது விஷயத்தில் நான் பெரிதும் சந்தோஷமடையலானேன். இனி நான் உனக்குக் கற்பிக்க வேண்டியது ஏதும் இலது. இனி நீ உலகிற் சென்று, கீர்த்தியும், பிரதாபமும் எய்துமாறு முயன்று வருவாய். நீ என்னுடைய மாணாக்கனாயிருந்து கழிந்த பத்தாண்டுகளாய்க் கலைகள் யாவும் பயின்றாய், இனி நீ செய்யவேண்டிய பிரதியுபகாரமாகிய குருகாணிக்கையை யான் பெற்றுக்கொள்வது என்னுடைய கடமையாகும், யாது எனக்கு நீ கொடுக்கப் போகின்றாய் பார்ப்போம்.

சீவோதயன்:—ஆசிரியர் பெரும! மக்கட்குவேண்டிய கலை யாண்மையும், மன்னர்க்கு வேண்டிய வீராண்மையும் போராண்மையும், ஒருங்கு கற்ற உமக்கு எளியோன் யாது செய்ய அருகன். என் ஆவியையே உமக்குக் குரு காணிக்கையாக சமர்ப்பிப்பன். மற்று ஏதும் அறியேன். எளியோன் பிழையைப் பொருத்தருளல் வேண்டும்.

நல்லாதனர்:—அப்பா சிவோதய! நின் வீராண்மைக்கு மிகவும் மகிழ்ந்தேன். நீ யெனக்குக் காணிக்கையாய்க் கொடுக்கவேண்டியது என்னவெனின் இன்று தொட்டு ஈராண்டளவும், உன்னையும், என்னையும், மற்றெவரையும் புரக்கும் மன்னன் மீது ஆயுத பாணியாகவேனும் அல்லது நிராயுத பாணியாகவேனும் போருக்குச் செல்லொணாது. அதுவே நீ எனக்குச் சமர்ப்பிப்பதான காணிக்கையாகும்.

சீவோதயன்!:—(சற்று யோசித்தல்) தந்தையினும்மினியாய்! காணிக்கைக்கு உமக்கு பயன் படுவதற்கான ஏதும் கேட்டருளாது வேறு கேட்டதென்ன?

நல்லாதனர்:—அப்பா! நீ அவைகளைப் பற்றியெல்லாம் கேட்பது தகதன்று. நான் கேட்டதற்கு நின் அபிப்பிராயமென்ன. அஃது உனக்கு உடன்படுமோ அல்லது படாதோ தெரிவிப்பாய்.

சீவோதயன்:—தம்விருப்பிற்கும் வெறுப்புண்டோ. உம் சம்மதப்படியே.

நல்லாதனார்:—ஆயின் மிகவும் நன்று, மன்னனால் நின் உயிர்க்கு ஏது கேடும் வருவதாயினும் ஆயுதம் பற்றேல், கனவிலும் நினவிலும் இதை மறத்தலாகாது. அற்றேல் அல்லாத பொல்லாங்குவந்து சேரும்.

சீவோதயன்:—உம் விருப்பின்படியே. சத்தியம், சத்தியம்.

நல்லாதனார்:—அப்பா சீவோதய ! நம்மைப் புரக்கும் மன்னன் விருத்தாந்தத்தையேனும் அறிவையோ. இம்மன்னனுக்கு முன்னம் தனிச்செங்கோலோச்சிய மன்னவர் பெருமான் வீரவன்மர் உற்றகதி ஏதேனும் தெரியுமோ அல்லது நின் பெற்றோர் யாவர் என அறிவையோ. பிள்ளாய் சற்றே புகல்வாய்.

சீவோதயன்.—ஐயா ! தாங்கள் அறிவித்தமொழிய சற்றேனும் அறியேன். என்னைப் பெற்றெடுத்தோர் செட்டிமக்களாவர்.

நல்லாதனார்:—நின் விருத்தாந்தம் அதுவல்ல. நின் தந்தையார் நின்னை என்பால் விடுத்துச் சென்றதும், நின் அங்கக் குறிப்பனைத்தையும் நோக்கி நீ சாமான்ய மக்களுள் ஒருவன் அல்லலென வோர்ந்து நிஷ்டையில் நின்று நின் பிறப்பை நோக்குதலும் இவ்விதம் கண்டேன். பின் செய்திவினவலும் யாவும் யான் கண்ட விதமே நின்றன. இன்றைக்கு 20 ஆண்டுகளுக்கு முன் வீரவன்மர் என்னும் மன்னர் பெருமான் இந்நாட்டை மநு முறைப்படி பரிபாலித்துவந்தார். அவர்தன் மாதுலர் மகளாகிய விசயாதேவியார் எனும் பெயர் புனைந்த வோர் மங்கையர்க் கரசியரைத் தனி மணம் புரிந்தார். பின்னர் காம வேட்கையாலும், காலக்கொடுமையாலும்; வினையின் திண்மையாலும், தன்னுடனைத்தையும் உத்தம சித்திராம் மதிவாணர் என்னும் நல்லமைச்சர் மொழிகேளாது பாதகமே ஓர் உருக்கொண்ட சிலாதகன் மணிவாசகன் இனிய வாசகத்திற்கு மயங்கி அவன்பால் அரசை ஒப்புவித்துக் காமப்படுகுழிப்படுதலும் அவ்வஞ்சகன் யாவையும் தன் வழிப்படுத்தி, அரசளித்த நல்வேந்தனையே போர்க் களத்தே மடித்தனன். பத்துத்திங்கள் கர்ப்பிணியாயிருந்த மன்னர்தம் மனைவியார் தமக்குற்ற தீங்காலத்தை யுன்னி வருந்தி மனுளர் திருமொழிப்படி மயிற் பொறி இலர்ந்து சென்றான். அப்பா ! மகனே, இதுவரைக்கும் நம்மவர்யாரும் அறிந்ததே பின்னர் தேவியார் மயிற்பொறியோடு ஏதோ அசந்தர்ப்பத்தால் மயானம் இறங்கி அவ்விடத்தே ஓர் ஆண் மகவை பயின்றனள். அம்மயானம்வாழ் தேவதையொன்று அக்குழவியைக் காப்பாற்றுமாறு தேவியார்க் குறைத்தலும், தேவியார் அன்னவர்பால் ஒப்புவித்து எங்கோ சென்றனர். அத்தேவதை அக்குழவியை விட்டகலுதலும் வைரமணி செட்டியார் இறந்த தன் முன் மகவைக் குழியிட மயானம் அடைந்து குழந்தையைக் குழியிட்டுத் திரும்புதலும் மற்றதோர் குழந்தையைக் கண்டு மகிழ்வெய்தித் தன்னகம் கொண்டுவந்தனர். அக்குழவி நீயே. இது நின்விருத்தாந்தமாகும் என் கூற்று மெய்ப்பட வேண்டின் நின் வளர்ப்புத் தந்தையாரை வினவின் விஷயம் உணர்வாய்.

சீவோதயன்:—ஆசிரியர் பெரும, உம்விருப்பின்படி நான் பிரமாணிக்கம் செய்யாதிருப்பின் என் தந்தையைக் கொன்ற பாதகனை இன்றே கொன்று அவனுயிரை மென்று தின்றே இருப்பேன். என்றாலும் இன்னும் இரண்டாண்டுகள் கழிந்ததும் என் தந்தையரைக் கொன்ற வஞ்சகனைக் கொன்று தந்தைப் பழி தீர்க்கின்றேன். சத்தியம் - சத்தியம்.



நல்லாதனார்:—அப்பா, குழந்தாய், நான் உன்னை அவ்விதம் கேட்டதின் காரணம் என்னவெனின் நினக்கு இன்னும் இரண்டாண்டளவும் போதாது. மேலும் அப்பாதகனைக் கலியனாக வின்னும் இரண்டாண்டுகள் உள்ளது. ஆனது பற்றிச் சற்றே நிதானமாயிருப்பாய்.

சீவோதயன்:—தாங்களே இவ்விதம் மொழியின் சிறியோன் செய்வதென்ன உளது. தங்கள் விருப்பின்படியே ஈராண்டளவும் வாளாயிருக்கின்றேன். பின்னர் தந்தை பழிதீர்க்கின்றேன்.

நல்லாதனார்:—சீவக! நின் அறிவுக்கு மெச்சினேன். நான் நினக்கு இயற்றவேண்டுவனவெல்லாம் முற்றும் முடிந்தது. நின்பொருட்டே இத்தனை காலம் இவ்விட மிருந்தேன். இனிஉனக்கு பல்கால கூறியவை யனைத்தையும் ஞாபகத்திருத்தி இரண்டாண்டுகள் சென்ற பின்னர் நின் பகைவனை முடித்து நாட்டைக் கைக்கொண்டு, நீதிவழுவாது அரசு செலுத்தித் தக்கதோர் நாயகியை மணந்து. புத்திரப் பெரும் பேற்றைப்பெற்று இன்புற்று நெடுங்காலம் வாழ்வாய். இனி நான் கான்புக்குத் தவமியற்ற விடை கொடுப்பாய்.

சீவோதயன்;—அருட்பெருங்கடலே ! குணப்பெருங் குன்றே. தாங்கள் இதுகாறும் திக்கற்ற என்பால் தண்ணருள் சாற்றி எனக்கு வேண்டியவன வெல்லாம் ஒருங்கு சற்பித்து, இனியெனக்கு ஆகவேண்டிய காரியங்களனைத்தையும் முடித்து வைத்துச் செல்லின் நலமாகவிருக்கும்.

நல்லாதனார்:—சீவோதய ! எதுக்கும் அஞ்சேல் ! இரண்டாண்டுகள் கழிந்ததும் நினக்கு யாவும் நன்மையாகவே முடியும். நின்னால் எனக்கு நேர்ந்த நன்மையதால் நான் இதுவரைக்கும் இவ்விடமிருந்து. நீ எவ்விதமும் விருத்தியடைவதற்கான முயற்சிகள் யாவுமின்றி நின்னையோர் சுத்தவீரனாகச் செய்து வைத்தேன். என் விருத்தாந்த மென்னவெனின் யான் முன்னம் வெள்ளியங் கிரியிலுள்ள வாரணவாசி யென்னும் நகரத்தரசன், உலோக மாபலனெனும் பெயருடையேன். தவமியற்றுதற்கெண்ணி, என்மைந்தனுக்கு அரசளித்துத் தவவேடம் பூண்டு நோன்பியற்றுகையில் பூர்வ ஜென்மப் பாவகர்மத்தால் எனக்குச் சூலை நோய் கண்டு அதனால் பெரிதும் வருந்தி ஒருவாற்றாலும் தீரப்பெற்றிலனாய் இங்கு வந்து நின்னைக் கண்டதும் அந்நோய் நீங்கப் பெற்றேனாதலின் நின்பாற் பெரு விருப்புற்று நின்னையுமோர் மன்னாக்குதற்கு ஈண்டிருந்தேன். என்னெண்ணமுற்றியது. நான் இனி ஒருகணமேனும் தாமதியேன்.

சீவோதயன்:—ஆசிரிய மூர்த்தியே: உம்மைப் பிரிந்ததற்குச் சிறிதுங் கருத்திலனாயினும் தங்கள் விருப்பிற்கு மறுப்புச் சொலக்கூடாமையின் நும் மிஷ்டப்படியே செய்வீர் (என்று சொல்லி பாதம் படிந்து வணங்கித் தன்னிரு கரங்களால் தாள்களைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொள்ளுதல். நல்லாதனார் தம்மிடம் விட்டுச் செல்லுதல் சீவோதயனும் இடம் விட்டு செல்லுதல்.

## களம் 2.

## அங்கம் 1.

துஷ்டத்தும்மன், மதனன் முதலியவர்கள் சபையில் இருப்பது. நந்தகோபன் என்னும் இடையர் தலைவன் அழுத கண்ணும் கலங்கிய சிந்தையனுமாய் அரசச் சபைக்கு ஓடிவந்து கீழே விழுந்து பெரிதும் அழுதல்.

துஷ்டத்:—நந்தகோப ! ஏன் இப்படி அழுகின்றாய். நினக்கென்ன நேரிட்டது? சீக்கிரம் புகல்வாய்.

நந்தகோபன்:—சாமி! நான் மாடுங்கன்றோடு வெளியே போகும்பொழுது ஒரு மூண்டை எதிராக வந்தாள்...........

துஷ்டத்:—அவைகளெல்லாம் இருக்கட்டும். நிகழ்ந்ததை நேரிற் புகலாது ஏதேதோ அவசகுனங்களெல்லாம் சொல்லுகின்றாய். நடந்த செய்தியை உடனே தெரிவிப்பாய்.

நந்தகோபன்:—சாமி! நம்மாடு (என்று மேலும் அதிகமாய் அழுதல்.)

கட்டியகாரன்:—நானுவது, மாடாவது, என்னடா ஏதேதோ பிதற்றுகின்றாய். சீக்கிரம் சொல்லுகிறையா இல்லையா.

நந்தகோபன்:—சாமி நம்மாடு என்று மேலும் அதிகமாய் அழுதல்.

துஷ்டத்:—நீங்க மாடாவது, நாம்ப மாடாவது, என்னடா? சீக்கிரம் சொல்லப்போகின்றனையா அல்லது சிறைப்படப் போகின்றனையா.

நந்தகோபன்:—அதேஞ்சாமி! அந்தப்பாயும் வேடங்கோ உங்க மாட்டெயல்லா அடிச்சிக்கினு போனு என்னெ செரெ வெப்பானே. நானு முயுக்கிட்டே உங்க மாடுங்களெ அல்லா போனு எம் பசங்ளா முயுங்கிட்டாங்கோ. அந்த போக்கிரி வேடங்கோ ரொம்பபோர வந்து எங்களெ நல்லா ஓட்டிக்கினு போறாங்கோ. நாம்போ என்னு செய்வது.

துஷ்டத்:—சங்கதியை நேராகச் சொல்லாது ஏதேதோ தாறுமாறாக உளருகின்றாய். என் முன் நில்லாதேயடா மூடா. சீக்கிரம் ஓடிப்போ.

மதனன்:—"மதுலா! விடயம் என்னவெனில் இடையர்கள் மாடுகளை அடுத்தகானில் மேய்க்க விடுத்திருந்தனராம். அவ்விடத்தில் வாழும் வேடுவர்கள் நம்மிடையர்களை யெல்லாம் நன்றாகவடித்துத் துரத்திவிட்டு மாடுகளைக் கொள்ளை கொண்டனராம். இரண்டொரு இடையர்களுக்கு நல்லடி கிடைத்ததாம். நந்தகோபனும் நல்ல அடிப்பட்டனனும். இது தான் நடந்தது.

நந்தகோபன்:—ஆமா, ஆமா, அதஞ்சாமி, இதோ பாருங்கோ கைவீங்கி இருக்கிறது. என்னெ செர வக்கிரே இண்ணிங்களே.

துஷ்டத்:—அடே மூடா! என் முன் நில்லாதே ஓடிப்போ (நந்தகோபன் போய் விடுதல்) என்ன தைரியம்! தனி மன்னன் யான் அரசு புரிகின்றேனென்றும் சற்றும் அச்சமில்லாது நம் நிரையையே கொள்ளை கொண்டவேடுவரைக் சும்மா விடுத்தல் தக்கதன்று. மதனா! இனி நீ சற்றும் தாமதித்தலாகாது. இப்பொழுதே நீ சென்று செய்யவேண்டிய முயற்சிகள் யாவும் செய்து நம்நிரையை மீட்டுவருவதோடு அவ்வேடுவர் தாளுக்கும் தளையிட்டு இவண் சீக்கிரமே கொண்டுவருதல் வேண்டும். சீக்கிரம் செல் [மதனன் விடைபெற்று செல்லுதல். குணாகர! அவ்வேடுவர்கள் தீரத்தை நோக்கி உளயோ? நம்நிரையென்று அறிந்திருந்து அவற்றைக் கொள்ளை கொண்டதோடு நம் இடையர்களையும் அடித்தனுப்பினர்களாம், நல்லது மதனன் எவ்விதமும் அவர்களைச் சிறைப்படுத்தி இவண் கொண்டுவருவான். அப்போது அவ்வேடுவர்கள் அனைவரையும் சற்றும் இறக்கமின்றிக் கொலைசெய்து விடுதல்வேண்டும்.

குணாகரன்:—அரசே! அவ்வேடுவர்களை வெல்ல யாவராலும் முடியாது. இதுகாறும் அவர்களை வென்றவர் ஒருவரும் கிடையாது. என்றாலும் மைத்துனர் மதனர் சென்றிருப்பதால் அவர் எப்படியும் ஒருவரையும் விடாது அவர்களை அவர்களிருக்கும் இடத்தோடு அப்படியே பிடுங்கிக்கொண்டு வந்திடுவார் [என்று முகம்சாய்த்துச் முறுவல் செய்வது]

துஷ்டத்:—குணாகர! நேற்றுப் பகல் யான் ஓர் அற்புதச் செய்தி கேள்விப்பட்டேன். அதைப்பற்றி நினக்கு ஏதேனும் தெரியுமோ.

[இதன் தொடர்ச்சி அடுத்த மலரில் வெளிவரும்]

# சென்னை கவர்ன்மெண்ட்

## ஆரம்பக் கல்வியைக் குறித்த ஆக்ட்

(89-ம் பக்கத் தொடர்ச்சி)

*சபையின் நிதியிலிருந்து மெம்பர்கள் பிரதிபலன் பெற்றுக்கொள்ள தகுதியற்றவர்களாவார்களென்பது.*

11. ஜில்லா கல்விச் சபையைச் சேர்ந்த எந்த மெம்பரும்-அந்தச் சபையின் வசத்திலுள்ள நிதியிலிருந்து யாதொரு சம்பளமாவது இதர பிரதிபலனாவது பெறக்கூடாது.

*சபை சட்டப்படி சேர்ந்ததாவது.*

12. ஒவ்வொரு ஜில்லா கல்விச் சபையும் - எந்தப் பிரதேச விஸ்தீர்ணத்துக்காக அது ஸ்தாபிக்கப்பட்டிருக்குமோ அந்தப் பிரதேச விஸ்தீர்ணத்திலுள்ள ஜில்லா கல்விச் சபையென்னும் பெயரால் சட்டப்படி சேர்ந்த ஒரு சபையாகும்; மேலும், அந்த சபையார் - இடைவிடாமல் ஒருவருக்குப்பின் ஒருவராய் வந்துகொண்டு பொதுவான முத்திரையும் உடையவர்களாவார்கள்; அல்லாமலும், அசையும் பொருள் அசையாப் பொருள் ஆகிய இரண்டு வகைச் சொத்தையும் அடைந்து அவைகளைக் கைப்பற்றில் வைத்திருக்கவும், நிர்ணயிக்கப்படக்கூடிய விதிகளுக்குட்பட்டு, தங்களுடைய கைப்பற்றிலிருக்கிற யாதொரு சொத்தை ட்ரான்ஸ்பர் செய்யவும் ஒப்பந்தங்கள் செய்து கொள்ளவும், சபையின் அமைப்புக்குரிய காரியத்துக்கு அவசியமான இதர காரியங்கள் எல்லாவற்றையும் செய்யவும் அவர்களுக்கு அதிகாரம் உண்டு; அன்றியும், அவர்கள் சட்டப்படிக்குண்டான தங்கள் சபையின் பெயரால் வியாஜ்ஜியம் தொடரலாம், அவர்கள்மேல் பிறரால் வியாஜ்ஜியம் தொடரப்படலாம்.

### (2) வேலை நடத்துகிற விதம்

*சபையார் ஆபீஸ் ஒன்றை ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்பது.*

13. ஒவ்வொரு ஜில்லா கல்விச்சபையும் ஆபீஸ் ஒன்றை ஏற்படுத்திக்கொண்டு, வேலை நடத்துவதற்காக தாங்கள் ஏற்படுத்தக்கூடிய நாட்களிலும் காலங்களிலும் ப்ரெஸிடென்டினுலாவது அவர் இல்லாத காலத்தில் வைஸ் ப்ரெஸிடென்டினுலாவது கூட்டம் கூட்டப்படும்பொழுதெல்லாம் இதர காலங்களிலுங்கூட கூடவேண்டும்.

ஆனால், ஒவ்வொரு சபையும் குறைந்தது இரண்டு மாதத்துக்கு ஒரு முறையாவது கூடவேண்டும்.

*கேட்டுக்கொள்வதன் மேல் ப்ரெஸிடென்டாவது வைஸ் ப்ரெஸிடென்டாவது கூட்டம் கூட்டவேண்டுமென்பது.*

14. ப்ரெஸிடென்டாவது அவர் இல்லாத காலத்தில் வைஸ் ப்ரெஸிடென்டாவது - சபையின் மெம்பர்களின் மூன்றில் ஒரு பங்குக்குக் குறையாதவர்கள் எழுதிக் கேட்டுக்கொள்வதன்மேல், எப்போதாகிலும், அந்த சபையைக் கூட்டவேண்டும்.

ஆனால், அப்படிப்பட்ட கூட்டம் இன்ன காலத்திலும் இன்ன இடத்திலும் இன்ன காரியத்துக்காகவும் கூடப்போகிறதென்று குறிப்பிட்டு அந்தக் கூட்டத்தைப்பற்றி நோடிஸ் ஒன்றை கூட்டம்கூடும் தினத்துக்குக் குறைந்தது ஆறு தினங்களுக்கு முன்னதாக ப்ரெஸிடென்டாவது வைஸ் ப்ரெஸிடென்டாவது மெம்பர்களில ஒவ்வொருவருக்கும் அனுப்பியிருந்தாலன்றி மற்றப்படி, ஷை கூட்டம் கூடக்கூடாது.

*கூட்டத்தில் இன்னுர் அக்கிராசனம் வகிக்கலா மென்பது*

15. (1) ஜில்லா கல்விச் சபையின் ஒவ்வொரு கூட்டத்திலும் ப்ரெஸிடென்டாவது அவர் இல்லாத காலத்தில் வைஸ் ப்ரெஸிடென்டாவது அக்கிராசனம் வகிக்கவேண்டும்.

(2) யாதொரு கூட்டத்துக்கு ப்ரெஸிடென்டும் வைஸ் ப்ரெஸிடென்டும் வராவிட்டால் அந்தக் கூட்டத்தில் ஹாஜராயிருக்கிற மெம்பர்கள் - தங்களில் எவராகிலும் ஒருவரை அதில் அக்கிராசனம் வகிக்கத் தெரிந்தெடுக்கவேண்டும்.

*கூட்டங்கள் பகிரங்கமாயிருக்கவேண்டுமென்பது.*

16. ஜில்லா கல்விச் சபையின் கூட்டங்கள் எல்லாம் ஜனங்கள் வரக்கூடியபடி நடத்தப்படவேண்டும்.

ஆனால், அக்கிராசனம் வகிக்கும் மெம்பர் - குறித்த யாதொரு விஷயத்தில், பொதுவாய்ப் பொது ஜனங்களால் குறித்த யாதொரு நபராவது கூட்டத்தை விட்டுப்போக வேண்டுமென்று கட்டளையிடலாம்; அந்தப்படி கட்டளையிடுவதற்குள்ள காரணங்களை எழுதிவைக்க வேண்டும்.

*கூட்டங்களில் க்வோரமும் நடவடிக்கை நடத்தும் முறையும்.*

17. (1) யாதொரு கூட்டத்துக்கு அப்போது சபையிலிருக்கும் மெம்பர்களின் மொத்த சங்கியையில் மூன்றில் ஒரு பங்குக்குக் குறையாதவர்களாவது வந்திருந்தாலன்றி மற்றப்படி, ஷை கூட்டத்தில் யாதொரு வேலையும் நடத்தக்கூடாது.

(2) யாதொரு கூட்டம் கூடுவதற்கு நியமிக்கப்பட்ட காலத்துக்குப் பிறகு அரை மணிநேரத்துக்குள் க்வோரம் ஏற்படாவிட்டால், ப்ரெஸிடென்டாவது அவர் இராதபட்சத்திலே வைஸ் ப்ரெஸிடென்டாவது கூட்டத்தைப் பிந்திய ஒரு தேதிவரையில் தள்ளி வைக்கலாம்.

(3) யாதொரு கூட்டத்தில் ஜில்லா கல்விச்சபைக்குமுன் வரக்கூடிய விஷயங்களெல்லாம் வோட்டுகள் பெரும்பான்மையாயிருப்பதைக்கொண்டு தீர்மானிக்கப்படவேண்டும்; மேலும் வோட்டுகள் சமமாக வேறுபடுகிற விஷயத்தில், ப்ரெஸிடென்ட் அல்லது அக்கிராசனம் வகிக்கும் வேறே மெம்பருக்கு இரண்டாவது அல்லது (காஸ்டிங்) முடிக்கும்படியான வோட் உண்டு.

(4) ஜில்லா கல்விச்சபையில் ஆலோசனைக்கு வரும் யாதொரு விஷயத்தில் (அது பிரதேச விஸ்தீர்ணத்துக்குள் இருக்கும் சகல நபர்களுக்கும் சொத்துக்களுக்கும் பொதுவாய்ப் பிரயோகப்படக்கூடிய சந்தர்ப்பத்தில் தவிர மற்றப்படி) திரவிய சம்மந்தமாய் எவ்வித பாத்தியதையேனும் உள்ள ஷை சபையைச் சேர்ந்த எந்த மெம்பரும் அந்த விஷயத்தைக் குறித்து வோட் கொடுக்கக்கூடாது.

(5) இது விஷயத்தில் பிரத்தியேகமாய்க் கூட்டப்பட்ட யாதொரு கூட்டத்திலும், அப்போது ஜில்லா கல்விச்சபையைச் சேர்ந்தவர்களாயுள்ள மெம்பர்களின் மொத்த சங்கியையில் பாதிக்குக் குறையாத பேர்களால் ஆதரிக்கப்பட்டதாயுள்ள சபையின் யாதொரு தீர்மானத்தினுலுமன்றி மற்றப்படி, ஷை சபையின் எந்தத் தீர்மானத்தையும் மூன்று மாதங்களுக்குள் அந்த சபையார் திருத்தவாவது ரத்துசெய்யவாவது கூடாது.

*நடவடிக்கைக் குறிப்புகள்*

18. (1) ஜில்லா கல்விச்சபையின் ஒவ்வொரு கூட்டத்திலும் நடத்தப்படும் நடவடிக்கைக் குறிப்புகளை எழுதி அது விஷயமாய் வைத்துவரப்படும் புஸ்தகத்தில் பதிவுசெய்யவேண்டியதோடுகூட, ப்ரெஸிடென்டாவது அந்தக் கூட்டத்தில் அக்கிராசனம் வகித்த மெம்பராவது அவைகளுக்குக் கையெழுத்துபோடவும்வேண்டும்; மேலும், ஷை குறிப்புகளை அந்தக் கௌன்ஸிலின் அதிகாரவரம்புக்குள் வசிக்கும் எந்த நபராவது பார்வையிடவேண்டுமானல்



சபையின் ஆபிஸிலே நியாயமான எல்லாக் காலங்களிலும் கட்டணம் இல்லாமல் பார்வையிடக்கூடியபடி அவைகளை வைத்திருக்கவேண்டும்.

(2) ஒவ்வொரு கூட்டத்திலும் நடத்தப்படும் நடவடிக்கைக் குறிப்புகளின் நகலொன்றை, இங்கிலீஷிலும் ஜில்லாவின் சுதேச பாஷையிலும் ஜில்லா கெஜெட்டில் பிரசுரிப்பதற்காக, அந்தக் கூட்டத்தின் தேதியிலிருந்து மூன்று தினங்களுக்குள் ஜில்லா கலெக்டருக்கு அனுப்பவேண்டும்.

(3) ஒவ்வொரு கூட்டத்தின் நடவடிக்கைகளைப்பற்றிய குறிப்புகளின் நகலொன்றை, ஜில்லா கல்விச்சபையில் எந்தெந்த பிரதேச அதிகாரசபையின் பிரதிநிதிகள் இருக்கிறார்களோ அப்படிப்பட்ட ஒவ்வொரு அதிகாரசபையைச் சேர்ந்த பிரதான நிர்வாக உத்தியோகஸ்தருக்கும் கல்விச்சபையின் ஒவ்வொரு மெம்பருக்கும் அந்த கூட்டத்தின் தேதியிலிருந்து ஒரு வாரத்துக்குள் அனுப்பவேண்டும்.

(4) ஜில்லா கல்விச் சபையின் ரெகார்டுகளை ப்ரெஸிடென்டும் அவர் இராதபட்சத்திலே வைஸ் ப்ரெஸிடென்டும் தம்வசத்தில் வைத்துக்கொண்டிருக்கவேண்டும்; மேலும், அவர்கள் - அப்படிப்பட்ட எவையேனும் ரெகார்டுகளுக்கு நகல்களை, இலவசமாகவாவது சபையார் நிச்சயிக்கக்கூடிய கட்டணங்கள் செலுத்தப்படுவதன்மேலாவது, பொதுவான அல்லது விசேஷ உத்திரவு மூலமாய்ச் சபையார் கட்டளையிடக்கூடிய உத்தியோகஸ்தர்களுக்காகிலும் நபர்களுக்காகிலும் கொடுக்கலாம்.

*ப்ரெஸிடென்டின் நிர்வாக அதிகாரங்களும், அவர் அவைகளைப் பிரித்துக் கொடுப்பதுடன், அந்த உத்தியோகம் காலியாயிருக்கும்போது அவைகள் நிறை வேற்றப்படுவதும்.*

19. (1) ஜில்லா கல்விச்சபையின் தீர்மானங்களை ப்ரெஸிடென்ட் அமுலுக்குக் கொண்டுவரவேண்டும்; சபையின் நிர்வாக அதிகாரம் முழுவதும் அவரிடம் சங்கிரமிப்பதுமல்லாமல், இந்த ஆக்டின் காரியங்கள் கிரமமாய் நடந்தேறுவதற்கு அவரே நேரில் உத்திரவாதியாவார்.

(2) சபையார் செலுத்தவேண்டுமென்று இந்த ஆக்டினுல் வெளிப்படையாய் நிர்ணயிக்கப்பட்டிருக்கிற எந்த அதிகாரத்தையும் ப்ரெஸிடென்ட் செலுத்துவது சட்டசம்மதமாகாது.

(3) ப்ரெஸிடென்டானவர் - இந்த ஆக்டினுல் ப்ரெஸிடென்டுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரங்களில் எதையாவது செலுத்தும்படியாகிலும் இதனுல அவர் செய்யவேண்டியதாகிற அலுவல்களில் எதையாவது செய்யும்படியாகிலும் எழுத்துமூலமான ஒரு உத்தரவுமூலமாக வைஸ் ப்ரெஸிடென்டுக்கு அதிகாரம் கொடுக்கலாம்; மேலும், அவர் அதே மாதிரியாக அப்படிப்பட்ட உத்தரவைத் திருத்தலாம் அல்லது ரத்துசெய்யலாம்:

ஆனுல், இந்தப் பகுதியின்படி அதிகாரங்களையாவது அலுவல்களையாவது பிரித்துக் கொடுப்பதனுல் ப்ரெஸிடென்டுக்கு இந்த ஆக்டினுல் ஏற்படும் யாதொரு உத்தரவாதத்திலிருந்து அவர் நிவாரணையாகமாட்டார்.

(2) ப்ரெஸிடென்ட் உத்தியோகம் காலியாயிருந்தால், வைஸ் பிரெஸிடென்டானவர்-புதிதாக ப்ரெஸிடென்ட் கிரமமாய்த் தெரிந்தெடுக்கப்படுகிற அல்லது நியமிக்கப்படுகிற வரையில், ப்ரெஸிடென்டுக்குரிய அலுவல்களைச் செய்யவேண்டும்.

வைஸ் ப்ரெஸிடெண்ட் இராவிட்டால், ஜில்லா கலெக்டரானவர்-புதிதாக ப்ரெஸிடெண்டாவது வைஸ் பிரெஸிடெண்டாவது கிரமமாய்த் தெரிந்தெடுக்கப்படுகிற அல்லது நியமிக்கப்படுகிறவரையில், ப்ரெஸிடெண்டுக்குரிய அலுவல்களைச் செய்யவேண்டும்.

*வேலை நடந்தேறுவதைக் குறித்த நிலையான உத்தரவுகள்.*

20. ஒவ்வொரு ஜில்லா கல்விச் சபையும் - இந்த ஆக்டுக்கும் அதன்படி ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்களால் தயார் செய்யப்படும் எவையேனும் விதிகளுக்கும் பொருத்தமாயிருக்கும்படி அடியிற்கண்ட விஷயங்களைப்பற்றி நிலையான உத்தரவுகள் செய்யலாம்:—

(1) அதன் கூட்டங்கள் நடக்கும் காலமும் இடமும்;
(2) அவைகளைக்குறித்து இன்னமாதிரியாய் நோடிஸ் கொடுக்கவேண்டுமென்பது;
(3) கூட்டங்களில் நடவடிக்கை நடத்தும் விதம்;

(4) சபையின் மெம்பர்கள் அலுவல்களைத் தங்களுக்குள் இன்னமாதிரி பிரித்துக் கொள்ளவேண்டுமென்பது ;

[5] முழுவதும் சபையின் மெம்பர்களில் சிலரைக்கொண்டாவது சிறிதுமட்டில் அப்படிப்பட்ட மெம்பர்களையும் சிறிது மட்டில் சபையின் பிரதேச அதிகார வரம்புக்குள் வசிக்கும் நபர்களை கொண்டாவது விசேஷ கமிட்டிகள் நியமிப்பதும், அந்த கமிட்டிகளின் அலுவல்களும், அவைகள் அனுசரிக்கவேண்டிய நடவடிக்கை முறையும்;

[6] சபைக்குச் செலுத்தப்படும் பணத்துக்காக இன்ன நபர்கள் ரசீது கொடுக்கலாமென்பது ;

(7) சபையின் அதிகாரவரம்புக்குள் இருக்கும் மூலாதார பாடசாலைகளை அந்த சபையின் மெம்பர்கள் பார்வையிடுவதும், அவைகளுக்குச் சம்பந்தப்பட்ட கணக்குகளையும் புஸ்தகங்களையும் ரெஜிஸ்டர்களையும் ரிடர்ன்களையும் ரிபோர்ட்டுகளையும் இதர தஸ்தவேஜுகளையும் பார்வையிடுவதும் ;

(8) இதைப்போன்ற இதரமான சகல விஷயங்களும்.

*நடத்தப்படும் நடவடிக்கையை நிறுத்திவைக்கபிரதேச கவர்ன்மெண்டாருக்குள்ள அதிகாரம்*

21. ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் யாதொரு ஜில்லா கல்விச் சபையின் எந்தத் தீர்மானமாவது சட்டப்படி ஜாரிசெய்யப்படவில்லையென்று அபிப்பிராயப்பட்டாலும், ஷை தீர்மானமாகிலும் யாதொரு ஜில்லா கல்விச் சபையாராலாவது ப்ரெஸிடென்டினாலாவது பிறப்பிக்கப்பட்ட எந்த உத்தரவாகிலும் இந்த ஆக்டை அனுசரித்தாவது அதைச் சாக்கிட்டுக்கொண்டாவது செய்யப்படப்போகிற அல்லது செய்யப்பட்டுவருகிற யாதொரு காரியமாகிலும் சட்டப்படி கொடுக்கப்பட்ட அதிகாரத்தை மீறி இருக்கிறதென்று அபிப்பிராயப்பட்டாலும், எழுத்து மூலமான உத்தரவைக்கொண்டு அவர் - அப்படிப்பட்ட தீர்மானத்தையாயினும் உத்தரவையாயினும் நிறைவேற்றக்கூடாதென்று நிறுத்திவைக்கலாம், அல்லது ஷை தீர்மானம் அல்லது உத்தரவை ரத்துசெய்யலாம் ; மேலும், அப்படிப்பட்ட யாதொரு காரியம் நடக்கவொட்டாமல் தடுக்கலாம்.

*தவறிப்போகும் விஷயங்களில் பிரதேச கவர்ன்மெண்டாருக்குள்ள அதிகாரங்கள்.*

22. (1) ஜில்லா கல்விச் சபையானது அதன் ப்ரெஸிடெண்டாவது இந்த ஆக்டினாலாகிலும் அதன்படியாகிலும் ஏற்படுத்தப்பட்ட யாதொரு அலுவலைச் செய்யத் தவறிப்போயிருப்பதாக ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்களுக்கு எந்தக் காலத்திலாயினும் தோன்றினால், ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் - அப்படிப்பட்ட அலுவலைச் செய்வதற்காக எழுத்து மூலமான உத்தரவைக் கொண்டு ஒரு கால அளவை நிஷ்கரிஷை செய்யலாம்.

(தொடரும்)



# விகடத் துணுக்குகள்

பெரியவர்:—நன்றாய் தூங்குகிறாயா?

பையன்:—ஆம். என் தாயார் என்னை எட்டு மணிக்கெல்லாம் தூங்கச் சொல்லுகிறார்.

பெரியவர்:—உன்னை ஸுகமாய் வைப்பதற்குத்தானே.

பையன்:—இல்லை. என் சட்டைகளை ரிபெயர் செய்வதற்காக.

---

ஒரு பிரபு கடைக்குச் சென்று சில துணிகளை பார்த்தார். ஒன்றும் பிடிக்கவில்லை.

கடைக்காரன்:—(அருவருப்புடன்) இன்னமும் ஏதாவது காண்பிக்கலாமோ?

பிரபு:—ஆம். ஆனால் உன் கடையில் இல்லை போல் தோன்றுகிறதே.

கடைக்காரன்.—என்னது அது?

பிரபு:—மரியாதை.

---

ட்ராம் வண்டி நிறைந்திருந்தது. அதில் ஒரு பெருத்த ஸ்திரீ வண்டியில் ஏறினாள். ஆனால் அவளுக்கு இடம் காணப்படவில்லை.

கிழவர்:—நல்ல ஸ்கௌட் நீ. அந்த ஸ்திரீக்கு இடம் கொஞ்சம் கொடுக்கலாகாதா?

ஸ்கௌட்:—என்ன பிரயோஜனம் ஐயா, நான் எழுந்திருந்தபோதிலும் அவள் உட்கார முடியாதே.

---

பையன்:—கிருஷ்ணனிடம் பாடம் நடக்கும்போது பேசுவதற்காக இனிமேல் என்னை உபாத்தியாயர் நாலு மணிக்குமேல் பள்ளிக்கூடத்தில் நிற்க வைக்கமாட்டார்.

தாயார்:—ரொம்பவும் நல்லது.

பையன்:— இதுவரையில் எனக்குப் பின்புறம் உட்கார்ந்திருந்தான். அவனிடம் பேசும்போதெல்லாம் நான் திரும்பவேண்டியிருந்தது. அதை வாத்தியார் கவனிப்பது வழக்கம்.

தா:—நீ இப்பொழுது அப்படிச் செய்வதில்லையே.

பை:—இல்லை, இப்பொழுது கிருஷ்ணன் எனக்கு முன் பெஞ்சில் உட்கார்ந்திருக்கிறான். அதனால் அவன் தான் தன் தலையை திருப்பவேண்டியதாய் இருக்கிறது.

---

நல்ல மனதுள்ள கிழவர்:—வேலை செய்து ஸம்பாதிப்பதற்கென்ன? லக்ஷ்மி தேவி ஒவ்வொரு வீட்டிற்கும் ஒரு தடவை வருகிறதுண்டோ.

சோம்பேரி:—ஆம் அவள் வந்தபோது கதவு சாத்தியிருந்தது. அதனால் அவளுடைய அக்காளை வைத்துவிட்டுப் போய்விட்டாள்.

---

தகப்பனார் பிள்ளை பொடிபோடுவதை விட்டுவிடும்படி புத்திமதி சொல்லிக்கொண்டே வந்தான். அவனும் விட்டு விட்டேனென்று சொல்லிக்கொண்டே வந்தான். கொஞ்சம் காலம் கழிந்தது.

தகப்பனார்:—முற்றிலும் விட்டு விட்டாயா?

பிள்ளை:—முதலில் கஷ்டமாய்தானிருந்தது. அதனால் இப்போது பொடியைவிட சுருட்டே பிடித்திருக்கிறது.

---

தகப்பனார் பையன் கையில் கதை புஸ்தகத்தை கொடுத்து படிக்கச் சொன்னார். சில கதைகள் வாசித்த பிறகு,

தகப்பனார்: — புஸ்தகத்தில் எந்த பாகம் நன்றாயிருக்கிறது.

பையன்:—மேற்புறம்.

த:—ஏன்.

பை:—புஸ்தகத்தை மூடின பிறகு தானே அது தெரிகிறது.

---

ஏலக்காரன்:—ரவிவர்மா எழுதிய படம் ஒன்றுதான் விலைக்கு இருக்கிறது.

வாங்க வந்தவர்:—இரண்டு இருக்கிறதாக சொன்னாயே நேற்று.

ஏ:—ஆம் மற்றொன்று இன்னமும் தயார் ஆகவில்லை.

## செய்தித் திரட்டு

ருஷ்யாவில் படிப்பிற்காக 300 கோடி ரூபாய் செலவு செய்தார்கள். 1933-ல் 350 கோடியாக உயர்த்தப்போகின்றார்களாம். 1914-ல் 70 லக்ஷம் பிள்ளைகள் படித்துக்கொண்டிருந்தார்கள். 1928-ல் 95 லக்ஷம் படித்துக்கொண்டிருந்தார்கள். 1933-ல் 170 லக்ஷம் பிள்ளைகள் படிக்க வேண்டுமென்று திட்டம் செய்திருக்கின்றார்கள்.

* * *

பன்ரொட்டிக்கடுத்த பண்டாரக் கோட்டை என்னும் கிராமத்திலுள்ள போர்டு எலிமென்டரி பாடசாலையில் 9 ஆதித்திராவிட பிள்ளைகள் சேர்க்கப்பட்டதினால் அங்குள்ள உயர்ஜாதி ஹிந்து வகுப்பைச் சேர்ந்த பிள்ளைகளெல்லாம் அப்பாடசாலையை பகிஷ்கரித்து விட்டார்களாம். இப்பொழுது அப்பாடசாலை 9 ஆதித்திராவிட பிள்ளைகளுடன் நடந்து வருகின்றதாம்.

* * *

தரங்கம்பாடிக்கு அடுத்த ஆக்கூர் என்னும் கிராமத்திலுள்ள போர்ட் எலிமென்டரி பெண் பாடசாலையில் ஒரு ஆதித்திராவிட பெண்மணியை உபாத்தியாயினியாக நியமித்ததும் அப்பாடசாலையிலுள்ள உயர் ஜாதி ஹிந்து பிள்ளைகளெல்லாம் நின்று விட்டார்களாம். உடனே போர்டார் ஒரு உயர் ஜாதி ஹிந்து பெண்மணியை உபாத்தியாயராக நியமித்தார்களாம்.

* * *

ஜூலை 13-ம் தேதி மாயவரம் முனிசிபாலிடியில் நடந்த கூட்டத்தில், செகண்டரி பாடசாலைகளில் வாசிக்கும் பிள்ளைகளின் சம்பளங்களை குறைப்பதின் நிமித்தம் செகண்டரி பாடசாலைகளில் வேலை செய்யும் உபாத்தியாயர்களின் சம்பளத்தை 100-க்கு 13 வீதம் குறைக்கும்படி ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதற்கு செகண்டரி கிரேட் உபாத்தியாயர்கள் ஒரு கூட்டம் கூட்டி முனிசிபாலிடியார் செய்த தீர்மானத்தை கண்டித்ததாக தெரிகிறது.

* * *

சென்னை பிரசிடென்சி காலேஜ் பிரின்ஸிபால் ஸ்ரீ ஆர். எம். ஸ்டாதம், திருவாங்கூர் கல்வி இலாகா தலைவராக நியமிக்கப்பட்டதை சர்க்கார் அங்கீகரித்துவிட்டது. அவர் 1933-ஆம் வருஷம் செப்டம்பர் முதல் தேதியிலிருந்து அவ் வுத்தியோகத்தை ஏற்றுக்கொள்வார்.

* * *

பையன்களைப்போலவே பெண் குழந்தைகளுக்கும் கட்டாயக்கல்வி ஏற்படுத்தவேண்டுமென்று வற்புறுத்தி டில்லி முனிசிபாலிட்டி மெம்பர் ஸ்ரீ பிஷன் சாஹேப் ஒரு தீர்மானம் கொண்டுவரப்போவதாக அறிவித்திருக்கிறார்.

* * *

ஆந்திர சர்வகலாசாலை ராஜீய பொருளாதார சாஸ்திர ஆசிரியராக டாக்டர். லங்காசுந்தரம் எம். ஏ. பி. எச். டி நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் இம்மாதம் 17-ந்தேதியன்று அந்த உத்தியோகத்தை ஏற்றுக் கொள்வார்.

* * *

ஜர்மனியின் இப்போதைய ஜனத்தொகை ஆறு கோடியே 53 லட்சம். அதில் ஆண்கள் மூன்று கோடியே 17 லட்சம். பெண்கள் மூன்று கோடி 30 லட்சம். இதனால் 19 லட்சம் பெண்கள் அங்கு அதிகமாக இருக்கின்றனர் என்பது தெரிகிறது.

* * *

சென்னை சர்வகலா சங்கத்தாரால் நடத்தப்பெறும் தனித் தமிழ்வித்வான் பரீட்சையில் இவ்வாண்டில் முதல்வராகத் தேர்ச்சி பெற்ற வித்வான். கி வா. ஜகந்நாதையர் அவர்களுக்கு திருச்சி டவுன் ஹாலில இம்மாதம் 12-ந்தேதி மாலை காசி மடத்து ஆயிரம் ரூபாய்த் தமிழ்ப் பரிசு அளிக்கப்படும்.



இத்தாலியைச் சேர்ந்த பாக்கியா என்னுமிடத்தில் ஒரு தொழிலாளியின் மனைவி சமீபத்தில் பிரசவித்தபோது இரண்டு பெண்களும், மூன்று ஆண்குழந்தைகளுமாக ஐந்து குழந்தைகள் ஏக காலத்தில் பிறந்ததாம்.

* * *

வங்காளத்திலுள்ள சிட்டகாங்குக் கடுத்த கிராமம் ஒன்றில் விவசாய மாது ஒருத்தி சமீபத்தில் பிரசவித்தபோது அவள் குழந்தைக்குப் பதிலாக கோழிமுட்டை போன்ற நூறு சிவந்த முட்டைகளைப் பெற்றுளாம். அதைக் கண்டதும் அம்மாது மூர்ச்சையடைந்தாள்.

* * *

திரு, கெ, இராமாநுஜம் பிள்ளையவர்களும், "ஆரம்பக் கல்வி", பத்திராதிபர்:—திரு, பி. வீரராகவன் அவர்களும், சென்னை ஜில்லா ஆசிரிய மானேஜர்கள் சங்கத்தினின்று ஜில்லாக் கல்விச்சபைக்கு அங்கத்தினர்களாக (29-7-33)ல் நடந்த பொதுக் கூட்டத்தில் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

* * *

சௌதாம்டனில் அமைத்துள்ள துறைமுகத்தை சமீபத்தில் திறந்துவைப்பார்கள். அதுதான் உலகத்திலேயே பெரிய துறைமுகமாகும். அதைக் கட்டி முடிக்க 20 லட்சம் பவுனுக்குமேல் செலவழிந்திருக்கிறது.

* * *

இம்மாதம் 20ந் தேதியன்று பக்கிங்ஹாம் அரண்மனையில் ஜார்ஜ் மன்னர் தம்பதிகள் அளித்த விருந்துக்கு சுமார் ஆயிரம்பேர்கள் வரை விஜயம் செய்திருந்தனர். வருஷா வருஷம் இவ்வைபவம் நடப்பது வழக்கம்.

* * *

இந்தியாவுக்கு வந்துபோன சைமன் கமிஷன் அங்கத்தினர்களில் ஒருவரான லார்ட் பர்ன்ஹாம் 20ந்தேதி இரவு தூங்கிக்கொண்டிருக்கையில் மாண்டார். அவர் அதற்கு இரண்டு நாட்களுக்கு முன் நடந்த பார்லிமெண்ட் கமிட்டிக் கூட்டத்திலும் பிரசன்னமாயிருந்தார்.

டோகியோ நகரில் சுமார் 92 வயதான ஒரு கிழவி மரணமடைந்தபோது சவத்தை அடக்கம் செய்யும்பொருட்டு பிரார்த்தனை நடந்தபோது சவப் பெட்டியில் சத்தம் கேட்டு அதைத் திறந்து பார்த்ததில் இறந்த கிழவி உயிருடன் எழுந்து வெளியே வந்து பிரார்த்தனைக்காக வைத்திருந்த பலகாரங்களை எடுத்துச் சாப்பிட்டாளாம்.

* * *

உலகிலேயே பெரிய மரமொன்றை சமீபத்தில் கண்டுபிடித்தார்கள். அது ஆஸ்திரேலியாவில் விக்டோரியா நகரத்துக்குச் சமீபத்திலுள்ள ஒரு காட்டில் இருக்கிறது. அது சுமார் 290 அடி உயரமிருக்கிறதாம்.

* * *

துருக்கியைச் சேர்ந்த ஸ்மர்னாவுக்கு தென் கிழக்கேயுள்ள வெனிஸ்லி என்னும் பிரதேசத்தில் கடுமையான பூகம்பம் ஏற்பட்டதால் ஏராளமானவர்கள் காயமடைந்ததுடன் 20-பேர் மாண்டனர். பல வீடுகளும் நாசமாயின.

* * *

இந்தியாவிலுள்ள ஜீவஹிம்சை தடைச் சங்கத்துடன் ஒத்துழைக்க பார்லிமெண்ட் கமிட்டி ஒன்றை லண்டனில் அமைந்திருக்கிறார்கள். அவர்கள் இந்தியாவில் மிருகங்களைப் பரிபாலிப்பதில் சிரத்தை காட்டுவார்கள்.

---


இனாம்! இனாம்!

"ஆரம்பக் கல்வி",

இஃது ஓர் உயரிய செந்தமிழ் மாதசஞ்சிகை. இதன் கண் பல அறிஞர்களால், சுகாதாரம், ஆரம்பக் கல்வி, பெண் கல்வி, நாடகம், முதலிய கல்விச் சம்பந்தப்பட்ட பல அரிய விஷயங்கள் வெளிவரும் ஆதலால் பாமரர், பண்டிதர், சிறுவர், முதியோர், பெண்கள் முக்கியமாக ஒவ்வொரு ஆரம்பா சிரியனும் வாசிக்கக் கூடிய சஞ்சிகை இது ஒன்றே. நமது ஆரம்பக் கல்விக்கு 5 சந்தாதார்களை சேர்த்தனுப்புவோர்களுக்கு அவர்கள் விரும்பும் 1 ரூ. விலையுள்ள புத்தகங்கள் இனாமாக அளிக்கப்படும்.

மானேஜர்.

### தென்காசி ரேஞ்சு ஆரம்ப ஆசிரியர்களின், வருஷாந்திர விழா.

தென்காசி, 30-7-33

ஷை விழாவானது 29-7-33 மாலை 3-30 மணிக்கு தென்காசி போர்டு வீவர் ஸ்கூலில் வைத்து சென்னை மாகாணக் கல்வி இலாகா டிப்டி டைரக்டர் ஸ்ரீமான் டி. சதாசிவ ரெட்டியார், எம். ஏ. (ஆக்ஸன்) அவர்கள் தலைமையின் கீழ் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. அவ்வமயம் திருநெல்வேலி ஜில்லாக் கல்வி ஆபீஸர் ஸ்ரீமான், கெ. எஸ். அப்பாசாமி ஐயர், பி. ஏ., எல். டி. அவர்களும், தாலூக்கா போர்டு பிரஸிடென்டு ஸ்ரீமான், டி. குமாரசுவாமி முதலியார் அவர்களும், ஷை போர்டு மெம்பர்களும், தென்காசி பஞ்சாயத்து போர்டு மெம்பர்கள் பலரும், இன்னும் உள்ளூர் வக்கீல்கள், டாக்டர்கள், கனவான்களும் விஜயம் செய்ததோடு, ரேஞ்ச் ஆரம்ப ஆசிரியர்கள் சுமார் 400 பேர் வரையும் வந்திருந்தது குறிப்பிடத்தக்கது. முதல் முதலில் மாணவர்கள் மாணவிகளால் கடவுள் வாழ்த்தும், வரவேற்பும் பாட்ப்பெற்றபின், தலைவர் முன்னுரையாகச் சில வார்த்தைகள் பேசினார்கள். பின்னர் தென்காசி பொன்னம்பலம் வித்தியாசாலை மானேஜர் டி. சுப்பிரமணியத்தால் தலைவருக்கு வரவேற்புப் பத்திரம் வாசித்துக்கொடுக்கப்பட்டது. சங்கக்காரியதரிசி ஸ்ரீமான், சி. சுப்பையாப் பிள்ளை அவர்களால் சங்க அறிக்கை வாசிக்கப்பட்டது. அதில் சங்கத்தில் நடந்த வேலைகளும் தேவைகளையும்பற்றி அறிவிக்கப்பட்டிருந்தன. பின்னர் மாணவர்களாலும் மாணவிகளாலும் கும்மி, கோலாட்டம், சம்பாஷணை முதலியவைகள் நடத்தப்பட்டன. தலைவர் முடிவுரையாகப் பேசும்பொழுது ஆரம்ப ஆசிரியர்கள்பால் தாம்மிக்க அனுதாபம் கொண்டுள்ளதாகவும், அவர்கள் கோரும் கோரிக்கைகளைச் கல்விச் சபையாரும், ஸ்தலஸ்தாபன போர்டாரும் கவனிக்க வேண்டுமென்றும் உதவி புரிய வேண்டு மென்றும், சர்க்காரைக் கேட்பதில் ஒரு பயனுமில்லை என்றும், பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மெம்பர்களே ஆசிரியர்களின் குறைபாடுகளைச் சரிவர நீக்கமுடியுமென்றும், தாமும் தன்னாலவதைச் செய்வதாகவும் கூறி முடித்தார்கள். இதையொட்டி திருநெல்வேலி ஜில்லாக் கல்வி ஆபீஸர் அவர்களும் பேசியபின், ரேஞ்சு டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீமான் பி. சுப்பராய பிள்ளை பி. ஏ. எல். டி. அவர்கள் தலைவருக்கும் வந்திருந்த கனவான்களுக்கும் வந்தனோபசாரங் கூறி, புஷ்பம், சந்தனம், தாம்பூலம் வழங்கியபின் கூட்டம் 6-மணிக்கு இனிது நிறைவேறியது.

உலக பிரசித்தி பெற்ற
ஆ. அப்பாதுரை முதலியார் அண்டு ஸன்.,

பட்டணம் பொடி

காரம், மணம், குணம், நிறம் முதலிய வாடை கமழுகின்றன.
[illegible] வாங்கி உபயோகித்தால் அதன் குணம் தங்களுக்கே தெரியவரும்.
[illegible] அப்பாதுரை முதலியார் அண்டு ஸன்.,
புகையிலை [illegible] ஏஜெண்டுகள், அண்டு, பொடி வியாபாரிகள்,
2-21 பாரிஷ் வெங்கடாஜல ஐயர் தெரு,
[illegible]ால் பெட்டி நெ. 189, சென்னை.

ஆலகக் காப்பது
190343

35 வருடங்களாய்

உலகப் பிரசித்தி பெற்ற திரேக புஷ்டிக்கும் தாது புஷ்டிக்கும் சிறந்த டானிக்




மதனமஞ்சரி

இம்மாத்திரைகள் அஜீர்ணம், மலச்சிக்கல், ஞாபகக் குறைவு நரம்பு தளர்ச்சி இவைகளை நாசமாக்கி திரேக புஷ்டியும் தாது புஷ்டியும் கொடுத்து

இல்லற வாழ்க்கையில் இன்பத்தையும் ஊக்கத்தையும், தரும்.

40 மாத்திரைகள் அடங்கிய டப்பி 1-க்கு விலை ரூபா 1.

இனம்! முற்றிலும் இனம்!!

வைத்திய வித்தியா

இப்புத்தகம் வேண்டுவோர் கடிதம் எழுதினால் தபால் சிலவு இல்லாமல் இனமாய் அனுப்பப்படும்.

மதன மஞ்சரி பார்மஸி, 1-94 சைனபஜார் ரோட், மதருஸ்.

“ பாரத நேசன் ”

இஃது ஓர் உயரிய செந்தமிழ் மாதசஞ்சிகை. இதன்கண் பல பேரறிஞர்களால், சமயம், பொருளாதாரம், சுகாதாரம், தொழில், வியாபாரம் முதலிய பொருள்களைப் பற்றி நுணுகி ஆராய்ந்து எழுதப்பெறும் கட்டுரைகளும், நூதன விநோத புனைந்துரைகளும் வெளிவரும் ஆதலால், பாமரர், பண்டிதர், சிறுவர், முதியோர், பெண்கள் அனைவரும் வாசிக்கக்கூடிய சஞ்சிகை இது ஒன்றே. வருட சந்தா 12-அணா அனுப்பி சந்தாதாரராவார்களாக. இது வி. பி-யில் அனுப்பப்படமாட்டாது.

“பாரத நேசன்” ஆபீஸ். சிந்தாதிரிப் பேட்டை,

# சுயச் சந்தனுதி தைலம்

இத்தைலத்தை மூளைக்கு சதா சூடேற்றிக் கொள்ளும் வித்வான்கள், வக்கீல்கள், ஜட்ஜிகள், பாடகர்கள், உபாத்தியாயர்கள், மாணுக்கர்கள், எல்லோருக்கும் நல்ல குணத்தை தந்து ஓர் சிறந்த தோழனைப்போல் பக்கபெலனுண்டாக்கும் சக்தி வாய்ந்தது மூளைக்கு நல்ல குளிர்ச்சியும் கண் ஒளியும் மயிர் வழ வழப்பும், சுகந்த வாசனையும், பித்தாதிக்கத்தா லுண்டாகும், மயக்கம் கண் எரிவு புகைச்சல் காதில் நீர் தங்குதல் புடரிவலி 'இவைகள் போவதுடன், வியர்வையா லுண்டாகும் நாற்றங்கள் மூலச் சூடும் தணியும், கண்களி லிட்டால் வெள்ளெழுத்துமாறும், மயிர் நரை நீங்கும், ரொம்பவும் அனுபவம்.

எமது விலாசம்:—

ஜெனரோக, நிவாரண வைத்தியசாலை,
சித்த ஆயுர்வேத பண்டிட்,
எம். பாலசுந்தரம் பிள்ளை,
நெ. 24, ஜீல்ஸ் தெருவு,
ஜி. டி. மதருஸ்.




## சுக வாழ்வு

நாம் நமது நாட்டில் சுகமாக வாழவிரும்பினுல் வியாதிகள் என்னும் சத்ருக்களுக்கு இடங்கொடாமல் நமது தேகத்தைப் பார்த்துக்கொள்ளவேண்டும். நீங்கள் தேக அசதி, மலச் சிக்கல், நரம்புகளின் தளர்ச்சி, ஞாபகமின்மை, மூத்திர சம்பந்தமான வியாதிகளால் கஷ்டப் பட்டால் உடனே,

## ஆதங்க நிக்ரஹக் மாத்ரைகளை

உபயோகியுங்கள். தேகத்தை வஜ்ர சரீரமாக்கி வைரக்கற் கோட்டையைப் போல் பாதுகாக்கும் 32 மாத்ரைக ளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூபா. 1.

இனும்! இனும்!! இனும்!!!

"இன்ப வாழ்க்கையிலடைந்த சக்தி"

உடனே விலாசத்தை தெரிவியுங்கள்

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதருஸ்.



# எமது தமிழ் நூல்கள்

(துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கபட்டவை.)

எமது கோபால் புதிய தமிழ் வாசக புஸ்தகம் 1-5, சென்னை, மைசூர், திருவாங்கூர், சிலோன், பர்மா, துரைத்தனத்தார் அங்கிகாரம்செய்து ஆயிரக்கணக்கான பள்ளிக்கூடங்களில் வைத்து நடத்தப்பட்டு வருகின்றன என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம். நீங்கள் இது வரையிலும் பார்த்திராவிட்டால் உடனே எழுதவும்.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| | எ. எம். எஸ். இராகவன் பி. ஏ., எல். டி., எழுதியவை. | | | |
| 1. | கோபால் புதிய தமிழ் வாசக முதல் புஸ்தகம் .... | 0 | 2 | 6 |
| 2. | கோபால் புதிய தமிழ் வாசக இரண்டாம் புஸ்தகம் .... | 0 | 3 | 0 |
| 3. | கோபால் புதிய தமிழ் வாசக மூன்ரும் புஸ்தகம் .... | 0 | 4 | 0 |
| 4. | கோபால் புதிய தமிழ் வாசக நான்காம் புஸ்தகம் .... | 0 | 4 | 6 |
| 5. | கோபால் புதிய தமிழ் வாசக ஐந்தாம் புஸ்தகம் .... | 0 | 6 | 0 |
| | புதிய புஸ்தகங்கள். | | | |
| 6. | கோபால் புதிய தமிழ்வாசகம் நெ. 6. வித்வான் எம். வி. வேணுகோபால் பிள்ளை | 0 | 7 | 0 |
| 7. | கோபால் புதிய தமிழ் வாசகம் நெ. 7. ,, .... | 0 | 8 | 0 |
| 8. | கோபால் புதிய தமிழ் வாசகம் நெ. 8. ,, .... | 0 | 9 | 0 |
| 9. | உலக அதிசயங்கள் புஸ்தகம் 1. சி. கார்டன் முகவுரையுடன் .... | 0 | 3 | 0 |
| 10. | ,, புஸ்தகம் 2. ,, .... | 0 | 4 | 0 |
| 11. | ,, புஸ்தகம் 3. ,, .... | 0 | 5 | 0 |
| 12. | தினசரி கணக்கு புஸ்தகம் 1. எஸ். ஜெகந்நாதன் .... | 0 | 4 | 0 |
| 13. | தினசரி கணக்கு புஸ்தகம் 2. ,, .... | 0 | 5 | 0 |
| 14. | தினசரி கணக்கு புஸ்தகம் 3. ,, .... | 0 | 5 | 0 |
| 15. | சென்னை ராஜதானி பூகோளம்—இ. வி. கோபாலய்யர் (அச்சில்) .... | 0 | 6 | 0 |
| 16. | சுகாதார விளக்கம் 4, 5-வது வகுப்புகளுக்கு உரியது. (இ வி. கோபால அய்யர் டிப்டி இன்ஸ்பெக்டர்) .... | 0 | 5 | 0 |
| 17. | சிறுமணிக் கதைகள்—எஸ். எஸ். அருணகிரி நாதர் .... | 0 | 5 | 0 |
| 18. | கம்பர் அல்லது கவியரசு—பண்டிதர் ஆ. நா. கன்னையா .... | 0 | 5 | 0 |
| 19. | தமிழ்ச் சிற்றிலக்கண வினு விடை—பண்டிதர் கா. ர. கோவிந்த ராஜ முதலியார் .... | 0 | 4 | 0 |
| 20. | சிறுவர் இந்துதேச சரித்திரம்—வி. ஜயராம அய்யர் பி. எ., பி. எல்..... | 0 | 5 | 0 |
| 21. | ஸிவிக்ஸ் அல்லது துரைத்தன விளக்கம்—முதற் புஸ்தகம் எஸ். சுப்பிரமணிய அய்யர், பி. எ., எல். டி. .... | 0 | 5 | 0 |
| 22. | ஸிவிக்ஸ் இரண்டாம் புஸ்தகம் ,, .... | 0 | 6 | 0 |
| 23. | கோபால் வாய்பாடு .... | 0 | 1 | 0 |
| 24. | சூராவாதித்த சோழன்—பண்டிதர் ஆர். சாம்பசிவ சர்மா .... | 0 | 12 | 0 |
| 25. | புத்திமானே பலவான்—எ. பரசுராமையர் எழுதியது. .... | 0 | 10 | 0 |
| 26. | கிருஷ்ண தேவராயர்—கெ. பி. சேஷாத்திரி ஐயங்கார் .... | 0 | 8 | 0 |
| 27. | பகீரதன்—பண்டிதர் ஆ. நா. கன்னையா .... | 0 | 6 | 0 |
| 28. | பத்திராயு அல்லது ஆட்சிக்குரியோன்—வித்வான் மே. வி. வேணுகோபாலப் பிள்ளை .... | 0 | 6 | 0 |
| 29. | துருவன் அல்லது விடா முயற்சியே வெற்றிக்குவழி—டையார் .... | 0 | 6 | 0 |
| 30. | ஏமாங்கதத்திளவரசன்—டி. என். சேஷாசலம், பி. எ., பி. எல். .... | 1 | 4 | 0 |

புஸ்தக வியாபாரிகளுக்கும், பள்ளிக்கூடங்களுக்கும் தக்க கமிஷன் தரப்படும்.
புஸ்தக விலைப்பட்டி இனுமாக அனுப்பப்படும். உடனே எழுதவும்.

பி. ஜி. பால் அண்டு கம்பெனி.

புஸ்தக வியாபாரிகள்,
ஜார்ஜ் டவுன், சென்னை.

# எமது தமிழ்ப் பிரசுரங்கள்

கலைமகள் வாசகம் முதல் வகுப்பு 0 2 6

வி. எஸ். சிவசாம்ப ஐயர், பி. எ. எல். டி. இயற்றியது.

## கலைமகள் வாசகங்கள்

| | | |
|---|---|---|
| இரண்டாம் வகுப்பு விலை அணா 3 | | வி. வீரராகவன், எம். எ. இயற்றியவை. |
| மூன்றும் வகுப்பு ,, 4 | | |
| நான்காம் வகுப்பு ,, 5 | | |
| ஐந்தாம் வகுப்பு ,, 6 | | |

## கலைமகள் கதாவாசகம்

முதல் புத்தகம் விலை 0 2 6

இரண்டாம் புத்தகம் விலை 0 3 0

## கலைமகள் கணித நூல்

| | |
|---|---|
| 1-வது புத்தகம் (1, 2, வகுப்பு) அணா 5 | எஸ். தருமலிங்க நாயக்கர். |
| 2-வது புத்தகம் (3வது வகுப்பு) ,, 6 | |
| 3-வது புத்தகம் (4வது வகுப்பு) ,, 8 | |
| 4-வது புத்தகம் (5வது வகுப்பு) ,, 9 | |

## நீதிக்கட்டுரைக் கோவை

| | |
|---|---|
| முதல் புத்தகம் அணா 4 | வி. ஞானதிக்கம், பி. எ. எல். டி. |
| இரண்டாம் புத்தகம் ,, 7 | |
| கலைமகள் நீதிக்கதைகள் ,, 4 | |

## இந்துதேச சித்திர சரித்திரக் கதைகள்

| | |
|---|---|
| முதற் புத்தகம் விலை அணா 4 | டி. ஆர் ரங்கசாமி ஐயங்கார், எம். எ., எல். டி. |
| இரண்டாம் புத்தகம் ,, 5 | |
| வட ஆற்காடு பூகோளம் அணா 4 | எஸ் ஸ்ரீனிவாச அய்யர் அவர்கள், பி. எ., எல். டி. எம். ஆர். எ.எஸ். |
| செங்கற்பட்டு பூகோளம் ,, 5 | |

## பாலர் கணிதம்

| | |
|---|---|
| முதற் புத்தகம் விலை அணா 5 | எம். எஸ். சுந்தரேஸ்வரன், எம். எ., எல். டி. |
| இரண்டாம் புத்தகம் ,, 6 | |
| மூன்றும் புத்தகம் ,, 7 | |
| நான்காம் புத்தகம் ,, 8 | |
| ஐந்தாம் புத்தகம் ,, 9 | |

| | | | |
|---|---|---|---|
| கந்தபுராண வெண்பா—வெண்பாப்புலி வேலுசாமிப் பிள்ளை | 4 | 0 | 0 |
| வாழ்க்கைச் சரிதை ... ... | 0 | 4 | 0 |
| உலக அதிசயங்கள் ... ... | 0 | 4 | 0 |
| முப்பெரும் புலவர் ... ... | 0 | 4 | 0 |
| தமிழ் இலக்கண வினாவிடை ... ... | 0 | 4 | 0 |
| இந்துஸ்தானத்து வீரர்கள்—எஸ். எஸ். அருணகிரிநாதர்... | 0 | 5 | 0 |
| விசித்திர விளக்கு—தமிழ்ப்புலவர் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை | 0 | 6 | 0 |
| பெஞ்சமின் பிராங்க்லின்—பண்டிதர்-பக்கிரிசாமி செட்டியார் | 0 | 6 | 0 |

**எடுகேஷனல் பப்ளிஷிங் கம்பெனி.** நெ. 2, சுங்கின் லேன் பீச்சு ஜார்ஜ் டவுன், மதராஸ்.